JAFFNA ... NOV 5 1946 VADDUKODDAI CEYLON

REGISTERED AT THE G. O. P. AS A NEWSPAPER

# ஈழகேசரி

தேசிய வார வெளியீடு

மலர் 17 | சுன்னுகம் — விய — ஐப்பசி கஅ, 3-11-'46 — ஞாயிறு | இதழ் 15

# சச்சரவுகள் ஓய்ந்தன?

## மந்திரிமார்மீது கண்டனம்

*[கொழும்பு நிருபர் கடிதம்]*

**"மனிதருணவை மனிதர் பறிக்கும் வழக்கமினியுண்டோ?" எனப் பாரதியார் முழக்குவதைக் கேட்ட தொழிலாளர்கள் தங்கள் உரிமைகளைப் பெறுவதற்காகப் போலும் சமீபத்தில் வேலை நிறுத்தம் செய்தார்கள். நாட்டிற் பீதியை உண்டாக்கினுர்கள். பின்னர் அதிகாரவர்க்கத்தினர் அடிபணிவதைக் கண்டு வேலைக்குத் திரும்பினுர்கள்?**

...வேலைநிறுத்தம் காரண
...கக் கொழும்புநகர் அல்லோல
...ல்லோலப்பட்டது. போக்குவர
...த வசதிக்கு இடையூறு ஏற்
...ட்டமையாற் பள்ளிக்கூட மாண
...ர்களும், அரசாங்க ஊழியர்களும்,
...யாபாரிகளும் சொல்லமுடியாத
...ஷ்டங்களுக்குள்ளாஞர்கள்.
...வை யாவும் இப்போது பழங்
...தையாகிக் கொழும்புநகர் மீண்
...ம் குதூகலத்துடன் காட்சியளி
...கின்றது.

...அரசாங்கத்தைத் தொழிலாளர்
...பமுறுத்தி வைத்ததைக் கண்டு,
...பாக்குவரத்து மந்திரி ஸ்ரீ
...காத்தலாவலை "பொறுப்பற்றவர்
...ளை நம்பவேண்டாம்; நான்
...ருக்கின்றேன். என்னிடம் வந்
...ருக்கவேண்டும். நாட்டு மக்கள்
... அவர்க [illegible] ணிக்குங் கஷ்
...ங்களைப் போக்குவதற்காக அர
...கம் சகல நடவடிக்கைகளை
... கையாளும்" என்று தொழி
...ர்களை எச்சரிக்கை செய்தார்.
...ற்காலிக தேசாதிபதி நிலை
...யை நன்குணர்ந்து தொழி
...ர்களின்குறைகளை ஆராய்ந்து
...ண்டிய உதவிகள் செய்யலா
...ன உறுதி கூறினுர். அவர்க
... சம்மதித்தனர். தற்காலிக
...சாதிபதியின் புத்தி சாதுரிய
... இச்செய்கை நாட்டில்
... மதியை நிலவச்செய்திருக்கி
...து. இல்லாதுபோனுல் 1915ம்
...ண்டில் நிகழ்ந்த கலகத்திலும்
...க்கப் பெரிய கோலாகலம்
...றை நாடு அனுபவித்திருக்கு
...னக் கூறினுல் அது மிகையா
...து.

### ...ள்ளம் வந்தபின்

...வேலைநிறுத்தம் ஏற்படுமென்
...த அரசாங்கம் ஏற்கனவே
...ந்திருந்தபோதிலும் இதுவிஷ
...தில் எவ்வித முன்னேற்பாடு
... செய்யாமலும், தொழிலா
...களின் கோரிக்கைகளுக்குச்
...விசாயாமலும் அரசாங்கம்
...ர்மையாக விருந்ததும் ஒரு
...னந்தான். இதுவிஷயம்பற்
... பிரதமகாரியதரிசி செப்டம்
...மாதத்தில் அறிந்திருந்தாராம்.
...டியானுல் இவர் காரியத்தை
... மறைக்காமல் மந்திரிமாருக்
... அரசாங்கசபைக்கும் உடனே
...வித்திருக்கலாம். வேலைநிறு
...ம் கொழும்பிலும் ஏனைய சில
...திகளிலும் காட்டுத் தீபோற்
...வியது. ஓடும் புகைவண்டி
...ழ்க்கப்பட்டது. துறைமுகத்
... நோக்கி வந்த கப்பல்கள்
...வுப் பொருள்களை இறக்க
...யாமையால் வேறு துறைக
... போய் அடைந்தன. அரசா
...அலுவல்களை ஸ்தம்பித்தன.
...னையும் ஒன்றன்பின் ஒன்
... மின்வேகத்தில் நிகழ்ந்தபின்
...ான் அரசாங்கம் விழித்தது!
...ளம் வருவதற்கு முன்னர்
...காலியிருந்தால் எத்தனை
...யிர்களைக் காப்பாற்றியிருக்
...வ்வளவோ கஷ்டங்களை
...நக்கலாம்.

தொழிலாளர்களும் மனிதர்கள் என்பதை அதிகாரவர்க்கம் உணர மறந்துவிடுகின்றது. நாட்டில் அதிருப்தி ஏற்படுமாகில் வேலைநிறுத்தங்களுங் கலகங்களும் ஏற்படத்தான் செய்யும்.

### தொழிலாளர் தவறு

அதிகார வர்க்கத்துடன் எதிர்த்துத் தமது உரிமைகளைப் பெறுவதற்காகத் தொழிலாளர் பொதுஜனங்களுக்கு ஆபத்துக்களை உண்டாக்கி உயிர்ச்சேதம் விளைப்பது துரோகமாகும். வேலைநிறுத்தம் வெற்றிகரமாக நடைபெறவேண்டின் பொதுஜனங்களின் ஆதரவும் அனுதாபமும் கிடைக்கவேண்டும். அனுராதபுரத்தில் நிகழ்ந்த கோர விபத்துத் தொழிலாளர்களின் துடியாட்டத்தின் விளைவாகுமாகில், அது பாதகச் செயலாகும்.

பொதுமக்களின் அனுதாபத்தைத் தொழிலாளர் இழந்தால் அரசாங்கம் வலிமை பெற்றுத் தொழிலாளர்களை அடக்கியாளமுற்படும். ஆகவேதான் வேலைநிறுத்தம் தர்மத்தின்பாற்பட்டதாகவிருத்தல் அவசியமாகின்றது. பயனற்ற வேலை நிறுத்தங்கள் பொதுமக்களுக்கு விலங்கங்களைக் கொடுப்பதாகில் தொழிலாளர்களின் முன்னேற்ற வேகம் குறைந்துவிடும்.

சமீபத்திலே தென்னிந்தியாவின் கொம்யூனிஸ்டுகள் வேலைநிறுத்தமொன்றை ஏற்படுத்திப் புகைவண்டிகளுக்கு ஓய்வு கொடுத்தார்கள். பொதுமக்கள் மிகுந்த கஷ்டங்களை அனுபவித்தனர். கொசுவைக்கொல்லுதற்கு அணுக்குண்டைப் பிரயோகிப்பதுபோலவிருக்கின்றதே, இந்த வேலைநிறுத்தம் என்று சில பத்திரிகைகள் கொம்யூனிஸ்டுக்களைக் கண்டித்தன. எனவே, பயனற்ற வேலைநிறுத்தங்களாலே தொழிலாளர்கள் பொதுமக்களுக்குக் கஷ்டங்களைக் கொடுப்பதன்றி அவர்களின் அனுதாபத்தைப்பெற முடியாது. தொழிலாளர்களின் உரிமைகள் பறிபோவதை ஜனநாயகம் ஒருபோதும் விரும்பமாட்டாது. அதேபோல நாட்டு மக்களுக்குத் தீங்குகள் விளைப்பதே வேலைநிறுத்தத்தின் தத்துவமாகவுமிருக்கமுடியாது.

### அரசாங்கசபையில்

செவ்வாய்க்கிழமை (29-10-46) அரசாங்கசபை கூடிற்று. வேலை

## ருஷிய சித்தாந்தம் ஆகாதாம்

நிறுத்தம் சம்பந்தமான பல சங்கதிகள் வெளிவந்தன. ஜனுப் ஜயா அவர்கள் தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளைக் கவனிக்கவேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பென அழுத்தமாகக் கூறினுர். அத்துடன் கொழும்பு மேயர்மீது ஜனக்கூட்டம் மோதி அவருக்கு ஊறு விளைத்ததையுங் கண்டித்தார்.

புதன்கிழமை நிகழ்ந்த வேலைநிறுத்த விவாதத்தின்போது பொதுவாக மந்திரிமாரும் சிறப்பாகச்சபைமுதல்வர் சேனநாயகாவும் அவருடைய நண்பன் ஸ்ரீ கொத்தலாவலையும் 'போதும் போது'மென வாங்கிக்கட்டினுர்கள். இது சம்பந்தமாக எத்தனையோ விஷயங்கள் அம்பலத்துக்கு வந்தன. டொக்டர் என். எம். பெரேரா 'கைது' செய்யப்பட்டுப் பின்னர் விடுதலைபெற்றமை வாசகர்களுக்குத் தெரிந்த விஷயம். அவரைப் பிடிக்கும்படி கட்டளையிட்டவர் உள்நாட்டு மந்திரியா, என்று அரசாங்கசபையிற் கேள்வி எழுந்தபோது உள்நாட்டுமந்திரி தமக்கு அதைப்பற்றி ஒன்றுமே தெரியாதெனக் கூறினுர். அப்படியானுல், அது எப்படி நிகழ்ந்ததென்பதைத்தானும் கூறுவதற்கு அவர் தயாராக விருக்கவில்லை.

### தலைவர்களின் கூத்து?

ஒரு சில தலைவர்கள் அதிகாரம் பெறுவதற்காக வேலைநிறுத்தங்களை ஏற்படுத்துகின்றனர். ருஷியப் பெரியாரின் தத்துவங்களைப் பின்பற்றுகின்றோமெனச் சொல்லி அவர்கள் நாட்டிற் கலவரங்களை நிகழ்த்திக் கூத்துப்பார்க்கின்றனர் எனவும் ஸ்ரீ மகாதேவா கூறினுர். ஜனநாயக ஆட்சி வேண்டுமெனப் போதித்துவிட்டு மறுகணம் நாட்டிற் குழப்பங்களை உண்டாக்கும் இராஜத்துரோகிகளுக்குத் தண்டனை விதிப்பதே முறை. ருஷியாவில் இவ்வழக்கம் உண்டு. அதை நாமுங் கையாளவேண்டுமென அவர் மேலுங் குறிப்பிட்டார்.

தொழிலாளர்களும் மனிதர் தான். இவர்களின் உரிமைகளைக் கவனித்தல் அவசியமென ஸ்ரீ பண்டாரநாயகா கூறி, அனுராதபுரத்தில் நிகழ்ந்த புகையிரத விபத்தையிட்டுத் தமது வருத்தத்தையும் தெரிவித்தார். ருஷியாவில் ஸ்டாலின் விதிக்குந் தண்டனைகளிலே தனக்கு எவ்வித நம்பிக்கையில்லையெனவும் மக்களின் ஆட்சியே நாட்டுக்கு நலன் கொடுக்குமெனவும் அவர் தெரிவித்தார்.

### ருஷிய முறை வேண்டாம்

ஸ்ரீ சேனநாயகா பேசிய வார்த்தைகள் வெகு விநோதமானவை. அரசாங்கத்தை எதிர்ப்பவர்களைத் தண்டிப்பதற்கு ருஷியாவைப் பின்பற்ற வேண்டியதில்லையெனக் கூறித் தாம் ருஷிய முறைகளை எதிர்ப்பதுடன் நில்லாது அம்முறைகளைக் கைக்கொள்பவர்களையும் எதிர்ப்பதாகவும் வெளுத்துவாங்கியிருக்கின்ருர். ஸோல்பெரித் திட்டத்தையேற்று இலங்கையை ஏகாதிபத்திய ஆட்சிக்கு இரையாக்குவதற்குத் தயாராகி நிற்கும் ஸ்ரீ சேனநாயாவுக்குப் பொதுவுடைமையில் நம்பிக்கை யேது?

## புகைரத விபத்துளானவர்க்கு நட்ட இடு

**அரசாங்கசபையில் முன்னறிக்கைப் பிரேரணை**

**சென்ற 30-10-46-ந் திகதி** புதன்கிழமை நடைபெற்ற அரசாங்கசபைக் கூட்டத்தில், காங்கேசன்துறைத் தொகுதிப் பிரதிநிதி திரு: சு. நடேசன் அவர்கள் கீழ்க்காணும் பிரேரணையைப் பிரேரிக்கப்போவதாக முன்னறிவித்தல் கொடுத்திருக்கின்ருர்:—

"அண்மையில் நிகழ்ந்த தொழிலாளர் வேலை நிறுத்தத்தின் போது அனுரதபுரிக்கு அணித்தாகவுள்ள இடத்தில் ஏற்பட்ட புகைரத விபத்திற் காயமுற்றவர்களுக்கும், இறந்தவர்களது சீவனுேபாயத்தில் தங்கியிருப்பவர்களுக்கும் ஏற்ற நட்ட ஈடு அரசாங்கம் செய்யவேண்டும் என இந்தச் சபை அபிப்பிராயங் கூறுகிறது."

# முன்னணியில் இந்தியா

## வங்கத்திற் சண்டித்தனம்

**இந்தியா இன்று முன்னணியில் முதன்மைபெற்று நிற்பது யாவர்க்கும் அளவுகடந்த குதூகலத்தை யுண்டாக்குஞ் செய்தியாகும்.**

**ஐக்கிய தேசிய மகாநாட்டில்** சுதந்திரம் பெற்ற இந்தியாவின் பிரதிநிதியாக ஸ்ரீமதி. விஷயலட்சுமி பண்டிற் பேசிய அரிய சொற்பொழிவு எவர் உள்ளத்தைத்தான் கொள்ளைகொள்ளாதிருக்கும். பேச்சினைக் கேட்டுச் சபையிலுள்ளோர் யாவரும் திகைப்படைந்தனர். பிரித்தானிய பிரதிநிதி அவர்கள் அம்மையார் பேசியவுடன் விரைந்து சென்று கை குலுக்கினராம். இதுவரையும் இந்தியா தனது சொந்த எண்ணத்தை உலக மகாசபையில் வெளியிட்டதில்லை. இப்பொழுதே இந்திய மக்களின் சார்பாக அவர்களின் உண்மைப் பிரதிநிதி என்ற முறையில் ஸ்ரீமதி. விஷயலட்சுமி பண்டிதர் பேசினர். "முதன்முதலாக இந்தியப் பிரதிநிதி, இந்திய தேசிய அரசாங்கத்தின் சார்பாகப் பொறுப்பான அதிகாரத்துடன் பேசுந் தகுதியைப் பெற்றனர், இந்தியராகிய நாங்கள் எல்லா நாடுகளும் சுதந்திர மடையவேண்டும் என்னும் நோக்கமுடையோர். சமாதானமும், சுதந்திரமும் மிக நெருங்கிய சம்பந்தமுடைய இரு விஷயங்கள். சுதந்திரம் ஒரு நாட்டிற்கு மறுக்கப்படின் யுத்தந் தோன்றுவது நிச்சயம்" என்று கூறினர்.

### நீதி வழங்குக

இந்தியாவின் பிரதிநிதியாகும் மேற்படி அம்மையார் தென்னுபிரிக்காவின் விஷயமாகப் பேசியது தான் மிக்க பரபரப்பினை உண்டு பண்ணியது, "இந்தியராகும் நாங்கள் தென்னுபிரிக்காவில் இந்தியர்க்கு அத்தேச அரசினர் செய்யும் கொடுமைகளை இப்போது இம்மகாநாட்டில் எடுத்துக்காட்டவேண்டியதாகின்றது. இந்த ஐக்கிய தேசிய சங்கத்தில் அங்கத்துவம் பெற்ற ஒரு நாடு அப்படியே அங்கத்துவம் பெற்ற இன்னுெரு நாட்டிற்குத் தீமை விளைப்பது எப்படி நீதியாகும்? இப் பொறுப்பான விஷயத்தை இம்மகாநாடு எப்படி முடிவு செய்கின்றதென்பதை இச்சபையினர் மாத்திரமன்று உலகிலுள்ள கோடிக்கணக்கான மக்கள் ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர். ஐரோப்பியர், அமெரிக்கர் முதலிய வெள்ளையர்களன்றி மற்றைய சாதியினர்களே தொகையிற் பெரும்பான்மையாராவர் என்பதை நாம் மறக்கக்கூடாது. இவ்விஷயம் அற்பமானதெனப் பாராமுகஞ் செய்யத் தக்கதன்று. இப்படியாக ஒரு சாதியினர் இன்னுெரு சாதியினரால் இடைவிடாது நீடித்துத் துன்பப்படுத்தப்படுவது இந்த ஐக்கியதேசிய மகாநாட்டின் அடிப்படையான கொள்கைக்கு முழுதும் மாறுகவிருப்பதால் இதைத்தடுத்து நீதி வழங்கச் செய்வது அதன் கடமையாகும் என்று அம்மையார் பெருமையுடன் பேசினர்.

### சுரண்ட முடியாது

மேலுங் கூறியதாவது:— 'இப்போது அடிமை நிலையில், வாழும் மக்கட்குச் சுதந்திரம் பெற்றுக் கொடுக்கும் விஷயத்தில் இந்த ஐக்கிய தேசிய சங்கம் நம்பிக்கையுடனும், விசுவாசத்துடனும் தொண்டாற்றுமென்று இந்தியா எதிர்பார்க்கின்றது. அத்துடன் இச்சங்கத்தில் அங்கத்துவம் வகிக்கும் நாட்டினரின் படைகளைக்கொண்டு சிறியநாட்டினரின் சுதந்திரக் கிளர்ச்சிகளை அடக்குவதையும் இந்தியா கண்டிக்கின்றது. ஆனுல், ஒரு நாட்டின் சுதந்திரத்தைக் கெடுத்து ஆக்கிரமிக்க முன்வந்த சாதியினர்மீது படைகளைக் கொண்டு யுத்தஞ் செய்வதை இந்தியா ஆட்சேபிக்கவில்லை. ஏகாதிபத்தியத்தை நிலைபெறச் செய்வதற்கும், மற்றைய நாட்டினரின் செல்வத்தை உறிஞ்சுவதற்கும் சேனைகளை உபயோகித்தல் முற்ருகப் பிழையாகும். உதாரணமாக, கீழ் இந்திய தீவுகளில் சமாதானத்தை நிலைபெறச் செய்வதற்கெனச் சாட்டுக் கூறி இந்தியப் படைகளை அங்கு கொண்டு சென்று அத்தேச மக்களின் சுதந்திர உணர்ச்சி நசுக்கப்படுகின்றது. இதை இந்திய மக்கள் முழுமனத்துடன் கண்டிக்கின்றனர். எல்லா நாடுகளின் சுதந்திரத்தை நிலைபெறச் செய்வதற்காக மகா யுத்தஞ் செய்து வெற்றி பெற்ற பின்னர் ஏகாதிபத்தியத்தை நிலைபெறச் செய்ய நினைத்து யுத்தஞ் செய்வது ஒன்றற்கொன்று முரணுகாதா? இந்தியா இதனை முற்ருகக் கண்டித்து இந்தியப் படைகளை அங்கிருந்து திருப்பியழைக்கும்படி வற்புறுத்தியுளது"

### லீக் நோக்கம் என்ன?

இந்திய மத்திய அரசாங்கத்தில்முஸ்லீம்கள்சேர்ந்துள்ளாராயினும், அவருடைய மனப்பான்மை இன்னும் பூரணமாக மாற்றமடைந்திலதென்றே கூறவேண்டும் மந்திரி சபையினர் ஒத்துழைக்கும் நோக்குடன் தொண்டு புரியினன்றி அரசியலைச் சீராக நடாத்துவது மிகவரிதாகும். இதற்கெல்லாம் காரணர் அவர்கள் தலைவராகும் ஜனுப் ஜின்னு அவர்களே. மந்திரிசபையிற் புகுந்த பின்னரும் தாம் இராசப்பிரதிநிதியோடு வேலைபார்ப்பதாக எண்ணுகின்றனர். காங்கிரஸ் கட்சியினருடனும், மற்றைய சிறுபான்மைக் கட்சிப் பிரதிநிதிகளுடனும் மிக நெருங்கி ஒத்துழைப்பினன்றி நன்மைவந்தெய் துவதெப்படி? மந்திரிசபையிற் சேர்ந்தபின்னரும் வகுப்புத் துவேஷத்தை மேற்கொள்ளும் வார்த்தைகளை இவர்கள் பேசுவதன் நோக்கம் எமக்கு விளங்கவில்லை. வங்காளத்தில் கலகம் மறுபடி ஆரம்பித்து அளப்பரும் தீமைகளை நிகழச்செய்கின்றதே கீழ்வங்காளத்தில் சென்ற இருபது நாட்களாக நடந்துவரும அட்டூழியத்துக்கும் வரம்பில்லை. இந்தியாவின் மற்றையபாகங்களிலும் குழப்பங்கள் தோன்றிவருவதாகப் புதினங்கள் கூறுகின்றன: இதற்கெல்லாம் முஸ்லீம் சங்கத்தினரன்றி வேறு யாவரோ பொறுப்பாளர்?

### வங்கத்தில் அக்கிரமம்

இந்த இருபதாம் நூற்றுண்டில் உலகில் எங்கேயாவது நடவாத அக்கிரமங்களும் பொல்லாங்குகளும் கீழ்வங்காளத்தில் நடைபெறுகின்றன. இத் தீமையை இழைக்கும் முஸ்லீம்களை பாக்

(தொடர்ச்சி 4ம் பக்கம் பார்க்க).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவரைத் தெரியுமா?

'கசின்'

இவர் ஒரு உபாத்தியாயர், வாட்டசாட்டமான மனிதன்; நரைக்கொட்டைக் கறுப்பு; நெற்றியில் திலகத்தோடு எந்நாளும் விளங்குவார்.

இவர் பாடசாலை 9 மணிக்குத் தொடங்குவதானால் 9 மணிக்கு ஒரு நிமிஷம் பிந்தாமலும், ஒரு நிமிஷம் முந்தாமலும் சரியாக 9 மணிக்கே செல்வார். இந்த வழக்கத்தில் ஒரு நாளாவது தவறவும்மாட்டார்.

இனி வகுப்புக்குள் நுழையும் பொழுதே (கணக்குப்பாடமாயிருந்தால்) கணக்குச் சொல்லிக் கொண்டே நுழைவார். அவர் வகுப்பில் வந்துநிற்கக் கிட்டத்தட்ட அரைவாசிக் கணக்குச் சொல்லி முடித்துவிடுவார்.

ஒரு மாணவன் ஒரு தவறு செய்ததை ஒருநாள் கண்டாரானால் அவன் ஒரு கெட்டவன் என்று திட்டமாகத் தீர்மானித்துவிடுவார். பின் அம்மாணவன் அவருடைய அபிப்பிராயத்தை எவ்விதத்திலும் மாற்ற முடியாது.

சில துடுக்கான மாணவர் அவரை அடிக்கடி குழப்பமான கேள்வி கேட்டுப் பாடத்தைக் குழப்புவார்கள் என்று, அவர்கள் விளங்காமல் ஒரு கேள்வி கேட்டாலும், அவர்களை 'இரும்' என்று இருத்திவிடுவார்.

கீழ்வகுப்புகளில் இவர் சட்டங்கள் பல. தினந்தோறும் 'கௌபீனந் தரித்திருக்கிறார்களா'? வென்று ஆண்பிள்ளைகளைப் பரிசோதித்துத் தண்டிப்பது முதலாகப், பல சோதனைகளுக்குள் மாணவர் காலையில் உட்படவேண்டும். மாணவருடன் ஒரு நேரம் சிரித்து விளையாடுவார். ஒருநேரம் கடுமையாக இருப்பார். மாணவர் வகுப்பில் அசையாமல் நிமிர்ந்து பாவைபோல் இருக்கவேண்டும் அயல் மாணவனுடன் கதைப்பதானாலும் ஆசிரியரின் உத்தரவு பெற்றுச் செல்லவேண்டும்.

ஐந்து நிமிஷங்களுக்கு மௌனவிரதம் என்றால் வாயசையவே கூடாது. வாசினைப்பாடங்கள், பாட்டுகள் இவைகள் எல்லாம் ஒருவகை இராகத்துடன் மாணவரைப் பயிற்றுவது அழகாயிருக்கும்.

தேகாப்பியாச பாடமென்றால் கொடுக்கும் கட்டளைகள், இரும்பிலிருந்து பிறக்கும் தொனிபோல் கடுமையாகவேயிருக்கும். சாதாரண ஆண்கள் மறந்தும் அப்படி உச்சரிப்பார்கள். ஆனால் அவர்கள் வாய்வுலாவிப் படுக்கவேண்டியவர்களே. பட்டாளம் "மார்ச்" பண்ணுகிறதே; அது மாதிரியிருக்கும் அவர் வகுப்பு அணிநடை.

இவர் உடன் ஆசிரியர்களுடன் பழகிக் கொள்வது ஒருதினுசு. ஒருவருடனும் அறிமுகமில்லாதவர்போலிருக்கும் இவர் போக்கு. பாடசாலை நேரத்தில் ஒருவருக்கு இன்முகமாவது காட்டமாட்டார். அதிகமான விஷயங்களை எழுத்துமூலத்திலேயே வைத்துக்கொள்வார். சுடுமூஞ்சியர் போற்றிரியுமிவர் வீட்டிலே போனால் சாதாரணமாகப் பழகிக்கொள்வார்.

கடமையிலிருந்து அற்பமேனுந் தவறவும் மாட்டார் கடமைக்குமேல் அற்பமேனுஞ் செய்யவும் மாட்டார்.

## பருத்தித்துறை சைவ ஊழியர் இயக்கம்

### 8-ம் ஆண்டு விழா

"புதியதோர் உலகம் செய்வோம்" என்ற பேரிகை முழக்கும் தற்காலத் தமிழ்க்கவிகளின் பாடல்களை ஆதாரமாகக்கொண்டு ஜய பேரிகை' என்னும் விஷயம் பற்றி ஸ்ரீ. இராஜ அரியரத்தினம் மேற்படி விழாவிற்குத் தலைமை தாங்கிப் பேசினார்.

பருத்தித்துறை சைவ ஊழியர் இயக்கத்தின் 8ம் ஆண்டு விழா தீபாவளித் தினத்தன்று (23-10-46) பிற்பகல் 4 மணிக்கு பருத்தித்துறைச் சித்திவிநாயகர் வித்தியாசாலையில் ஆரம்பமாகிச் சிறப்பாக நிகழ்ந்தது. 'உரிமை வெறி கொண்ட தமிழன்' என்னும் விஷயம்பற்றி வித்துவான் க. வேந்தனார் அவர்கள் உணர்ச்சியுடன் பேசினார்

எஸ். வைத்தீஸ்வரஐயர் அவர்களின் இசைக்கச்சேரிக்குப்பின் ஸ்ரீமதி. சந்திரவதனா திருப்பதி அவர்களும் செல்வி கமலவதனா நாகமுத்து அவர்களும் இசைவிருந்தளித்தனர். அநேக அன்பர்கள் விழாவிற்குத் திரண்டு வந்திருந்தனர்.

ஆசிரியர் ஏரம்பமூர்த்தி அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறினார். — கடிதம்

இப் பத்திரிகையில் வெளியாகும் ஹாஸ்யக் கட்டுரைகள், கதைகளில் வரும் பெயர்கள் கற்பனைப் பெயர்களே. கட்டுரையாளர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.


SAMUEL SONS & Co., Ltd.,

*HOSPITAL ROAD, JAFFNA*

T'GRAM: ECHIRON T'PHONE: 62

Head Office :- 371, OLD MOOR ST., COLOMBO

T'Phone : 2341 (2 lines)

நியாயமான விலை, நடுநிலை, நற்கீர்த்தி, திட நம்பிக்கை சிறப்பாக உள்ள நம் வர்த்தகசாலை:

- கட்டிட வேலைக்குரிய இரும்புக் கம்பிகள், சலாகைகள், கேடர்கள், சிமெந்து, செங்கல், கறையான் எண்ணெய், பூட்டு, பிணைச்சல்
- கமத்தொழில், கைத்தொழில் ஆயுதங்கள்
- நீரிறைக்கும் இயந்திரங்கள், குழாய்கள், தாங்கிகள்
- பைசிக்கிள் வண்டிகள், ரியூப்ஸ், ரையேர்ஸ், கிறீஸ்
- சல்லடை வலைகள், ஒட்டுப் பலகைகள் (Ply-wood), இருமிநாசினி, மைஎண்ணெய், மை வகைகள்

ஆதியன அடக்கியுள்ளது.

சகாயமான விலைக்கு எப்போதும் பெற்றுக்கொள்ளலாம்.

சாமுவேல், சன்ஸ் & கம்பெனி லிமிரெட்

ஆஸ்பத்திரி ரோட் : யாழ்ப்பாணம்

தந்தி : 'எச்அயரன்' 'போன் : 62

[2839]



புகையிலைப்பயிர் செய்வோர்க்கு — ஓர் விசேஷ அறிவித்தல்

# புகையிலை

## கொழும்பு கொம்மேர்ஷல் கம்பெனியார்

அநேக வருஷங்களாக எல்லாப் பயிர்களுக்கும் வேண்டிய பசளைவகைகளை விநியோகஞ் செய்பவர்களாக இருந்துவருகிறார்கள்.

புகையிலைப் பயிர்ச் செய்கைக்கு அவசியமான பசளைகளைப்பற்றி விசேஷமாக அறிந்தவர்கள்

# C. C. C.

பிரத்தியேக புகையிலைப் பசளைக் கலப்புகளை உபயோகிப்பதாலேயே சிறந்த செழிப்பையும் மிக உயர்ந்த லாபத்தையும் பெறமுடியும்

விசேஷ ஆலோசனை இலவசமாகக் கூறப்படும். எங்கள் விசேஷ விற்பனை ஒழுங்குகளைப்பற்றிய விபரங்களுக்கு உடனே எழுதவும்.

## கொழும்பு கொம்மேர்ஷல் கம்பெனி லிமிற்றெட்

(பெரிய பிரித்தானியாவில் சமுதாயமாக்கப்பட்டது)

(அங்கத்தவர்களின் உத்தரவாதம் மட்டுப்படுத்தப்பட்டது)

THE

COLOMBO COMMERCIAL COMPANY LTD.

Incorporated in Great Britain
Liability of Members Ltd.

[illegible]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் கூறும் சீர்திருத்தம்

மு. கோவிந்தசாமி

உணர்வு, உணவு, உறைவிடம், வாழ்க்கைமுறை இவற்றிற் பறவை, விலங்கு முதலான் மனிதனுக்குக் கீழ்ப்படியிலுள்ள உயிரினம், ஆயிரமாயிரம் ஆண்டுகட்கு முன்போலவே இன்றும் உள்ளன. அந்நிலை இயற்கையினுலோ, மனுேவளர்ச்சியின்மையாலோ இருக்கலாம். ஆனுல் மனித அறிவு நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே செல்கின்றது. சிலநாட்களில் அவன் வாழ்வில் எண்ணற்ற மாறுதல்கள்!

மற்ற உயிர்களை மாற்றமுயன்ருலும் முடியாது. மனிதன் அப்படியல்ல. தானே திருந்தும் ஆற்றல் மனிதனிடம் மிகக் குறைவுதான். அவனது அறிவு, ஒழுக்கங்கள், பேச்சு, வழக்கங்கள், ஏன், நடை உடையிலுங்கூடப் பிறரையே பெரிதும் பின்பற்றுகிருன். அதனுல்தான் அவனுக்குச் சீர்திருத்தம் வேண்டுவதாகின்றது. மனிதன் மூன்னையினும் இன்று வியக்குமளவில் மேம்பாடடைந்துள்ளான். அது அவனுடைய இழிநிலையை நோக்கிய திருத்தத்திஞல் அல்ல. ஆனுல் உயர்நிலை (சீர்மை), அதாவது நீதி, அமைதி, பிறரை வருத்தாமல் அடையும் உண்மை இன்பம் இவற்றைக் குறியாகக் கொண்ட திருத்தத்தாலேயே. இதையுட்கொண்டே 'சீர்திருத்தம்' என்கிருேம்.

மனித அறிவு வளர வளரச் சீர்திருத்தம் பயனும், விளக்கமும் அடைகின்றது. அறிவின் மூலம் அடையக்கூடாத தொன்றுமில்லை. 'அறிவுடையார் எல்லாம் உடையர்' என்னும் குறள். ஆனுல் வாழ்க்கைநலன் (உடல்நலம் — உணவு — சூழ்நிலை), அறிவின்நலன் இவற்றில் எதன்வழி எது திருத்தமுறும் என்பதிற் பண்டைக் காலமுதல் வேறுபாடு இருந்துவருகின்றது. உலகில் பழைய தத்துவங்களும், மதங்களும் பெரும்பான்மையும் அறிவுநலனையே முதன்மையாக வற்புறுத்தும். மனிதனுக்கு அறிவே சிறப்பு. அது சிறப்புற்றுயர வாழ்க்கை நலன் அதன்வழி தானே வரும் என்ற கொள்கையுடையன. அறிவுயர்வு திட்டவாழ்வின் நலனையும் துறக்கலாம் என்ற கொள்கையையும் பௌத்தம், சமணம் முதலாம் துறவு-மதங்கள் வற்புறுத்தி வாழ்ந்தன. வாழ்க்கை நலன் உயர்ந்தாலன்றி மனித அறிவும் பண்பாடும் உயராதென்ற கொள்கை மார்க்ஸ். பேகன் முதலிய புதுக்கால தத்துவப் பேரறிஞர் கருத்தாம். வள்ளுவரும் முடிவாக அறிவை விரும்பினுலும்:

'நெருப்பினுள் துஞ்சலும்
ஆகும் நிரப்பினுள்
யாதொன்றும் கண்பா டரிது'

என்பதில் வறுமையால் அவ்வளவு துன்பமெனக்கூறும் அவர் 'வாழ்வு நலனின்றி அறிவுயர்ச்சி யில்லை' யென்பதனை யுணர்ந்தே யிருக்கிருர் என உணர்கிருேம். அவ்வளவு பசித்துன்பத்திடை அறிவுயருமென அவர் எதிர் பார்க்க மாட்டார்.

மனித அறிவு மிக மிக மெல்லமாகவே உயர்வும், விளக்கமும் அடைகின்றது. உலக அறிவுப் புத்தகத்தில் ஓர் புதுக்கருத்தைச் சேர்ப்பவன் பேரறிஞன் எனப்படுகிருன். அவன் நூற்ருண்டுக் கொருவனுகக்கூட இருத்தல் அருமை. அவ்வறிவிற் சோர்வு, குறைபாடு, அழிவு இவை அடிக்கடி மலிகின்றன. இவற்றை நீக்கி, முயற்சி, நிறைவு, புதுமை (ஆக்கல்) இவற்ருல் மாறுதலைக்கொண்டு வரும் போதே மனிதன் திருத்தமும் முன்னேற்றமும் அடைந்தவனுகிருன்.

இப்பணியினை உலகிற் செய்வோரே 'செயற்கரிய செய்யும் பெரியோர்' ஆவர். இவரைப் பின்பற்றுவோர் பலராக இருக்கலாம். இத்தகு பெரியோர் இல்லாத நாடு தேக்கமும், இருட்சியும் அடைகின்றது. இதனுலேயே சீர்திருத்தம் வாய்ப்பேச்சல்ல, செயல், செயல் என்கிருேம். வாழ்வில் கொண்டுவரும் மாறுதலைச் சொல் செய்யுமோ?

ஆனுல், சொல் செயலுக்கு முற்பட்டதாக, பொருந்தியதாக அமையுமாயின் அதுவே உண்மையான சீர்திருத்தமாகும். அத்தகைய நெறியினரே இதுவரை உலகை மாற்றியமைத்திருக்கின்றனர். வெறும் பேச்சில் என்றும் பலர் திருத்தம் செய்ய முயல்வோருள் இருக்கலாம். சின்னுள், ஏழையறிவினருங்கூட அதில் ஏமாற மாட்டார்.

'தவமறைந்தல்லவை' செய்யும்துறவிகள்போல இவர்கள் தம்சொல்.செல்வாக்குப்போர்வையில் மறைந்து தமக்கும் சிலர்க்கும் பல நன்மைகள் (தன்னலம்) தேடிக்கொள்கின்றனர் என்பதுண்மை. சீர்திருத்தத்திற்குப் பதில் தம் நலன் வளர்ந்ததும் இவர்களைக் காணமுடியாது. அல்லது மக்கள் இவர்களை அறிந்து புறக்கணித்துவிடுதலுமுண்டு.

அல்லவை தேய
அறம்பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின்

என்பதே வள்ளுவர் சீர்திருத்தம். நாட்டில் மக்கள் வாழ்வில் முட்டுக்கட்டையாக நிற்கும் தீமைகள் யாவும் அகல வேண்டும். அங்கு முடிந்த நன்மைகளெல்லாம் அமைய வேண்டும், இவைதான் இன்னும் சீர்திருத்தத்தின் பயனும் குறியுமாகும். இதை விளக்கி வழிகூறுவதே இக்குறள். இந்நிலையைக்கொண்டு சலியாமல் உழைப்பதே சீர்திருத்தக்காரனின், ஏன், ஒவ்வொரு மனிதனின் கடமையாகும். முதலில் அதனைப் பெரும்பாலார் எதிர்க்கலாம். அதுதான் உண்மையான இயற்கை. துன்பம், இகழ்ச்சி எண்ணிலாதன நேரலாம். இயன்ற வழிகளிலெல்லாம் அதனில் முயற்சிப்பதே.

"ஒல்லும் வகையெல்லாம்
அறவினை யோவாதே
செல்லும்வா யெல்லாம்
செயல்"

என்ற பொய்யாமொழியின் ஊக்குதலாகும். ஒரு சில நல்லவர் தம் நெறியைப் பின்பற்றச் செய்துவிட்டாற் போதும். அதில் உண்மையிருப்பின் அழியாமற் சில ஆண்டுகளில் உலகையேகூட கவர்ந்துவிடும். தன் கொள்கைகளில் உள்ள குறைகளைப் பிறர் புறக்கணிப்பதின் மூலமோ, எதிர்ப்பதன் மூலமோ அறிவதைவிட முதலிலேயே முடிந்த அளவு அவற்றை நீக்கி விடுவதிலேயே நாட்டில் நலனும் வளர்ச்சியும் உண்டு. இல்லையேல் பெரியவர் சொல்லும் எதனையும் உடனே பின்பற்றும் மக்கள் அதனை நடைமுறையாக்கினபின் விடச்செய்வது அருமையும், தனக்கே இழிவுமாகும். இந்நெறியிற் பிடிவாதம் ஏற்பட்டுப் பிழையென உணர்ந்தும் திருத்திக் கொள்ளாமையால் எவ்வளவோ தீமை விளைகின்றது. இதனுல் ஒருவர் செய்த பிழை மக்கட்கே தீமையாய், சீர்திருத்தம் கீழ்நோக்கத் தொடங்கி விடுகிறது. இதனைப் போக்கவே வள்ளுவர் 'முதலில் தீர தனக்குள்ளேயே ஆராயும் முறையை யுரைக்கிருர். பிறர் அக்கொள்கையை வெளிப்படுத்திஞல் தாம் அதனை எப்படி அலசி அதில் பிழைகாணும் முயற்சியையே கொள்வார்களோ அதேபோலத் தன் கொள்கையை ஆராய்ந்து விடுவானுகில் அவனே முழுச் சீர்திருத்தக்காரன். அவன் கொள்கையில் உண்மையின் அடிப்படையில்லாமற் போகாது.

தன்குற்றம் நீக்கிப் பிறர்
குற்றம் காண்கிற்பின், என்
குற்றமாகும்,

"ஏதிலான் குற்றம்போல்
தன் குற்றங் காண்கிற்பின்,
தீதுண்டோ எனவும் பலவிடங்களில் வற்புறுத்துகிருர். அப்படியன்றிப் பிறரிடமுள்ள பிழைகளேயே கருதித்தன்னை மறக்கவே, பிறரும் அவரினும் நம்மிடமுள்ள பிழை

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)

## சிட்டு, நீ வாழி!

[கா. க. க.]

அன்ருெருநாள் கண்பனவன்
அழைத்திடவே யானுமுடன்
சென்ருெருநெற் களனியதன்
திகழுமுருக் கண்டேனுல்
குன்றனவே நின்றதோரு
குருந்தமரம் ஓர்கிளையில்
துன்றிவிளை யாடினதோர்
தோகுதியாஞ் சிட்டினமே.

அம்மரத்தின் அடியிலிருந்
தம்புலிதாங் கியபெம்மான்
செம்மனத்த செல்வியவள்
சிறுகூலி பெற்றிடுவான்
தம்மனத்தி லேமகிழ்ந்து
தரிக்கின்ற ஆபரணம்
வெம்மனத்தைக் கண்காட்ட
விரைந்துவிரைந் தேயூர

சிட்டினங்க ளதைக்கண்டு
சில்லெனவே சென்ருெதுங்கி
மட்டிலடங் காததுனி
வருத்தவருந் துப்போழுதில்
கட்டவிழு மலர்மார்பன்
காயாம்பு மேனியனே
கிட்டிவரு வதுபோலுங்
கிளர்நாகந் தனைநோக்கி.

பறந்துவந்தோ ரிழஞ்சிட்டு
பற்றியதன் வாலினையே
பறந்துபறந் தேயீர்க்கப்
பதைத்தோளித்த அதன்குலமும்
சிறந்தவழி யிதுவென்றே
சென்ருெருமித் தேமோத
அறந்தவறி வந்தபணி
அலறிவிழுந் தோடியதே.

எந்தாயர் எந்தேயம்
என்றெமதி யேபார்க்கு
கொந்தே யுழலாது
நுட்பமதாய்க் கற்பித்த
தந்தாயே நீவாழி
தரணிதனி லுன்புகழே
நந்தா திலங்கவுமே
நானும் வணங்குவனே.

# வீரத் தெய்வம்

வித்துவான் வேந்தனுர்

முருகன் ஓர் வீரத் தெய்வம்: சுதந்திரத் தெய்வம். அவன் இளமைத் திருக்கோலத்தில் அன்புந் தொண்டும் வீரமும் அலையெறிகின்றன. ஓர் இளைஞன் வாழ்வில், அன்பு, தொண்டு, வீரம், என்னும் ஆண்மைப் பண்புகள் மூன்றும் அளவிற் கலந்து விளங்கவேண்டுமென்பதே முருகன் வழிபாட்டின் நோக்கம். இப் பண்புகளை "இச்சாசக்தி, கிரியாசக்தி, "ஞானசக்தி என்றும் கூறுவார்கள். (இச்சை—அன்பு — கிரியை — தொண்டு—ஞானம்—வீரம்—அறிவு) முருகனைப்போன்ற வீரக் குழந்தைகள் சுதந்திர உலகில் தோன்றவேண்டும். முருகன் இயற்கைத் தெய்வம். சுதந்திரம் பெற்ற வீரர்களின் மலைபோன்ற வெற்றித் தோள்களில் ஏறி விளையாடுகின்ற வீரக் குழந்தை. அஞ்சாத உள்ளத்தில், வீரத் தியாகிகளின் உள்ளத்தில் முருகன் வீற்றிருக்கின்ருன். மலைகள்தோறும் முருகன் கோவில்கள் அமைந்திருப்பதையும், அவனை மலைகளின்மேல் ஏறி விளையாடுகின்ற வீரத் தலைவன் என்று கூறுகின்ற கருத்தையும் நோக்குங்கள்.

முருகன் கொடியவரை அழிக்கப் போர் புரிந்தவன். மக்களை மக்கள் அடிமைப்படுத்தி ஆண்ட அதிகார வழக்கை அறுத்தொழித்தவன். அவுணர் குலத்தை வேரறுத்து, அமரர் குலத்தை வாழ்வித்தவன். அடிமைச் சிறையில் அகப்பட்டு வருந்திய மக்களை மீட்டுச் சுதந்திரவாழ்வை அவர்களித்தவன். (அவுணர் — சர்வாதிகாரிகள். அமரர் — அச்சர்வாதிகாரிகளால் அடக்கி ஆளப்பட்ட மக்கள்.) இன்று, முருகனின் ஆண்மைப் பண்புகள், நிரம்பிய வீரத்தொண்டர்கள், அதிகார ஆட்சியை வீழ்த்தி, அன்பாட்சியை நிலைநிறுத்தும், சுதந்திர வாழ்வில், மக்களை இறக்கிவிட்டார்கள். சர்வாதிகாரிகளும், அவர்களின் அன்புத் தோழர்களாகிய முதலாளிக் கூட்டத்தினரும், மக்களின் சுதந்திரத்தை விழுங்கி வந்த நெருக்கடியில் நின்று, உலகைக் காப்பாற்றும் தொண்டுபூண் டுழைத்த வீரத் தியாகிகளின் வெற்றிமுரசு எங்கும் ஒலிக்கின்றது. அதிகார வெறிபிடித்த அவுணக் கூட்டங்கள் அழிந்தொழிகின்ற அவலக் குரலுங் கேட்கின்றது. இளைஞர்களே! நீங்கள் முருகனை வழிபடுங்கள். முருகனை வழிபடுதல் என்ருல் — அன்புந் தொண்டும் வீரமும் அளவிற் கலந்து அலையிடுகின்ற, ஆண்சிங்கங்களாய்—சுதந்திர வீரர்களாய் நீங்கள் வெளிப்படுங்கள். அடிமைத்தளையை அறுத்தெறியுங்கள். உங்கள் வீரத்தில், அன்புந் தொண்டும் ஊடுருவிப் பாயவேண்டும். அன்புந் தொண்டுங் கலவாத தனிவீரம், அதிகார வெறிபிடித்த வீரம் உலகை அழிக்கும். அதற்கு நீங்கள் ஆளாகாதீர். அன்புந் தொண்டும் உங்கள் செயலின் பயன்கள். அவற்றையே அறிவுடை யுலகம் வரவேற்கின்றது. செயல்வீரனின் ... முருகன் ... அவனின் அன்புத் தோழர்கள் தான் நீங்கள். சுதந்திரத் தொண்டாற்ற வெளிப்படுங்கள்.

முருகனின் ஆண்மைப் பண்புகளாகிய அன்பு, தொண்டு, வீரம் என்பன, தனித்தனி உருவந்தாங்கியும் மூன்றும் ஒன்றுசேர்ந்த முழு உருவந் தாங்கியும் நின்று இன்றைய பாரதநாட்டின் விடுதலைப் போரை வெற்றியுடன் ஆற்றிவருகின்றன. அவற்றுள் அன்பின் உருவம் 'காந்தி' தொண்டின்உருவம்—நேரு, வீரத்தின் உருவம், சுபாஸ் சந்திரபோஸ். இம் முப்பெரும் வீரத்தொண்டர்களும் சுதந்திரப்போரின் படைத்தலைவர்கள். இவர்களில் ஊறிக்கிடக்கின்ற வீரப் பண்புகளே முருகன் வழிபாடு. இனி இம் முப்பண்புகளும் ஒன்றையொன்று மிகாமற் கலந்த முழுமுதல் உருவமாகவும் நேரு விளங்குகின்ருர். மூன்று பண்புகளும் ஒன்றுபட்ட வாழ்வின் பயனே சுதந்திர வாழ்வாகும். வீரம், அன்பு, தொண்டு என்னும் இரு கண்களின் வழியாகக் கதிர்விட்டுப் பாயும் அளவுபட்ட தியாக ஒளியால் அலர்த்தப்படுவதே சுதந்திர மலர். அம் மலரில் நின்று வழியும் அன்புத் தேனை அள்ளிப் பருகும் உரிமைக் கலந்தான் முருகன். எனவே முருகன் வழிபாடு சுதந்திர தேவியின் வழிபாடாகும்.

வீரத் தாய்மார்களே! முருகனை வழிபடுங்கள். சுதந்திரதேவியின் அன்புக் குரலில் நெஞ்சு வளரும் வீரக் குழந்தைகளை ஈன்றுதவுங்கள். உங்கள் தொட்டிற் பாட்டிலும் வட்டிற் சோற்றிலும் அன்புந் தொண்டும் வீரமும் கமழ வேண்டும். இதுதான் முருகன் வழிபாடு. விடுதலைநோன்பு. முருகன் வெற்றி சுதந்திர வெற்றி. முருகனைப் பாடுங்கள்.

சூரனை முன் போரில் வென்று
சுதந்திரத்தைக் காத்தவன்
வீரனெங்கள் முருகனுக்கு
வெற்றி மாலை சூட்டுவோம்.
அன்பு, தொண்டில் ஊறிப் பாய
ஆண்மை தோன்றும் வாழ்விலே
முன்பு சூரை வென்ற முருகன்
முதன்மை நின்று வீறுமே.
இளமைக் கோலக் கதிரின் சாயல்
எறிக்கும் இன்பக் கனவிலே
அளவி லன்புச் சாயல் காட்டும்
ஆண்மை தெய்வம் முருகனே.
அன்புத் தாயின் நெஞ்சில் முருகன்
ஆண்மைக் குணங்கள் ஊறினுல்
அன்னைத் தொலைத்து வீரப் புதல்வர்
சுதந்திரத்தேர் ஏறுவார்;
குழந்தை முருகன் பண்பை யெங்கள்
குலத்தின் செல்வ மாக்குவோம்
இழந்து நின்ற சுதந்திரத்தை
எய்திக் கொடியைத் தூக்குவோம்.

—Announcement—

- BATTERY CHARGING
- BATTERY REPAIRS
- DISTILLED WATER
- BATTERY ACID

Repairs To:
MOTOR AND
ELECTRICAL INSTRUMENTS
Undertaken at
Competitive Rates

Samuel,
Sons & Co. Ltd.
Hospital Road: JAFFNA
T. 'Gram: 'ECHIRON'
T. 'Phone: No. 62

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழகேசரி

சுன்னுகம்: விய, ஐப்பசி கஅ

## வேலை நிறுத்தங்கள்

சமீபத்தில் — பல்வேறு நாடுகளில் தோன்றி அளவில்லாத தீமைகளையும் வசதிக் குறைவுகளையும் உண்டாக்கிவரும் இயக்கங்களில் வேலை நிறுத்தமும் ஒன்ருகும். இலங்கைவாசிகள் இவ்வியக்கத்தின் பெறுபேற்றைச் சென்றவாரமே எத்தன்மையதென்று அறிந்தாராயினும், இந்தியாவிலும் மற்றைய மேலைத்தேச நாடுகளிலும் இது சாமானிய சம்பவமாய் இருக்கின்றது. என்ருலும், இவ்வியக்கம் சிற்சில காரணங்களால் அதிகரித்துக் கொண்டும் பல தீமைகளையும் வசதிக் குறைவுகளையும் சமுதாயத்தினர்க்கு உண்டாக்கியே நிற்கின்றது. வேலை நிறுத்தத்தின் பேரால் அரசியல் இயந்திரம் நகராது தடைப்படின், அதனுல் வரும் கஷ்டங்கள் பொதுமக்கட்கே இன்னலை விளைப்பதாகும். இவ்வியக்கம் ஏற்படுவதற்கு முதற் காரணமாக வுள்ளது தொழிலாளர் பெறும் குறைந்த சம்பளமே. இவர்கள் ஒருங்கு சேர்ந்து சம்பளத்தை உயர்த்தும்படி கேட்டவுடன் அரசினரோ, மற்றைய ஸ்தாபனங்களோ அதற்கு உடனே இணங்காவிடின், வேலை நிறுத்தங்கள் ஏற்பட்டு விடுகின்றன. வேலை நிறுத்தம் அவசியமோ அன்ருே என்பதை நாம் ஆராயப் புகவில்லை. அது கையாளப்படுங்கால் மேற்கொள்ளும் முறைகள்—வழிகள் என்பன பற்றிச் சில கூருது விடுவது முறையன்று.

சில குழந்தைகட்கு அழுகை எவ்வளவு பெலமுடையதோ, அவ்வாறே தொழிலாளரும் தங்குறைகளை நிவிர்த்தியடையச் செய்யும் பொருட்டு வேலை நிறுத்தத்தை அனுட்டிக்கின்றனர். ஆனுல், அவர்கள் சட்டத்துள் அமைந்து சமாதானமாகப் பலாத்காரமின்றி நடத்தின் அவர்களை எவருங் கண்டிக்கமாட்டார். சமீபத்தில் இலங்கைப் புகையிரதப் பகுதியில் வேலை செய்யுந் தொழிலாளர் வேலை நிறுத்தஞ் செய்தனர். அவர்களில் அனுதாபங் காட்டிக் கொழும்புத் துறைமுகத் தொழிலாளரும் நகர சங்கத் தொழிலாளரும் வேலைக்குப் போகாது மறுத்தனர். எல்லாமாக வேலை நிறுத்தஞ் செய்தோர் தொகை 24,000 பேராகும். இவர்கள் தமது குறைகளை எடுத்துக் கூறியும் அரசினர் விரைந்து அக்கறை காட்டாமையால், வேலை நிறுத்தம் ஆரம்பிக்கப் படலாயிற்று. அரசினர் இவ்விஷயமாக ஊக்கங் காட்டியிருப்பின் வேலை நிறுத்தம் ஏற்படக் காரணமில்லை. எல்லா உத்தியோகத்தர்கட்குஞ் சம்பள உயர்வு ஏற்படத் தொழிலாளருக்கு மாத்திரம் அது ஏற்படாது போவது எப்படி முறையாகும்? செலவு பன்மடங்கு உயர்ந்து செல்லும் இக்காலத்தில், தொழிலாளருக்கும் கஷ்டம் ஏற்படுந்தானே. இதை அரசினர் அறியாதிருந்தனரா?

தொழிலாளர் வேலைநிறுத்தத்துடன் நில்லாது, தீமையோடும் அபாயத்தோடுங் கூடிய முறைகளையும் கையாள முற்பட்டது பெரிதும் கண்டிக்கப்பட வேண்டிய விஷயமாகும். இவ்வியக்கத்தின் சார்பாகவே அனுராதபுரத்துக்குச் சமீபமாகப் புகைரத விபத்து ஏற்பட்டது. அதன் காரணமாக ஏற்பட்ட உயிர்ச் சேதத்துக்கும் பொருள் நட்டத்துக்கும் பொறுப்பாளர் யாவர்? புகையிரதங்கள் ஓடிச்செல்லுங்கால் தொழிலாளர் கற்களால் எறிந்து பலர்க்குக் காயமுண்டாக்கினரராம். தெருவீதிகளிற் சில உத்தியோகத்தர்களையும் தாக்கினராம். கொழும்பு நகரசங்கத் தலைவர் இவர்கள் கையிலகப்பட்டு மிக்க காயமடைந்தனராமே. இதற்கெல்லாம் காரணர் தொழிலாளரேயாயினும் இவர்களின் தலைவராக நடிப்போர்மீது தான் எல்லாப் பொறுப்புக்களும் அடைகின்றன. பாமரராகும் தொழிலாளரைச் சிரிய முறையில் நடத்த வியலாதவர் தலைமைப் பதவிக்கேன் ஆசைப்படவேண்டுமோ? பாமர சனங்களைப் பொறுப்பற்ற பேச்சுக்களால் தட்டி எழுப்பி விடுதல் எளிது; ஆனுல் பின்னர் அடக்கி நல்வழிப்படுத்துதல் அரிது. மேலும், தலைவர்களாயுள்ளோர் அரசியலில் தாம் அதிகாரத்தையும் முதன்மையையும் பெறுதற்கும் இவ்வேலை நிறுத்தம் போன்ற இயக்கங்களை உபயோகிக்க முயல்கின்றனர். இது ஒவ்வாத விஷயமாகும்.

சம்பளம் போதாதென வேலை நிறுத்தஞ் செய்த தொழிலாளர், ஒவ்வாத பல கேள்விகளைக் கேட்கவும் முற்பட்டனர். ஸோல்பரி அரசியற்றிட்டம் அங்கீகரிக்கப் படாதென்றும் ஆட்சேபித்தனர். இதற்கும் வேலைநிறுத்தத்துக்கும் என்ன சம்பந்தமோ யாமறியோம். தலைவர்கள் தமது குறைகளை ஏழைகளாகுந் தொழிலாளர் மூலமாகத் தீர்த்துக் கொள்ள முயல்வது முறையாகாது. அரசியலில் ஏதாவது திருத்த மேற்பட வேண்டியதாயின், பொதுமக்களின் பிரதிநிதிகள் மூலமாக அரசாங்கசபையிற் பேசி முடிவாக்கலாமே. அதைவிட்டுத் தொழிலாளர் வாய்களினின்று அதைவெளியிட வேண்டியதில்லையே. இவ்வேலை நிறுத்தம், அபேதவாதிகளாகும் சிலரது சூழ்ச்சியின் பேறேயென்றுங் கருத வேண்டியதாகின்றது. அபேதவாதத்தைத் தொழிலாளர் மூலமாக நாட்டிற் பரப்ப எண்ணுவது பெருந் தீமையாகவே முடியும். அறிவிற் குறைந்தவராகும் இவர்கள் எச்சமயத்திலும் பலாத்காரத்தையே நாடுவர். சமீபத்தில் நடந்தேறிய வேலை நிறுத்தல் இயக்கமே இதற்குச் சான்ருகும். அபேதவாதக் கொள்கையை நாம் சரி அல்லது பிழையென்று கூற இங்கு முற்படவில்லை. பலாத்காரத்தோடு கூடிய புரட்சிகட்கு இடங்கோல முற்படுவதையே நாம் ஆட்சேபிக்கின்றேம். எந்தக் கட்சியினரும் எவ்வரசியல் முறையையும் பலாத்காரமின்றிப் பரப்பின், அதை எவரும் கண்டிக்க முன்வரமாட்டார், எனவே வேலை நிறுத்தத்தை நடத்தும் தலைவர்கள் பலாத்காரம் ஏற்படாது தடுக்க இயலாதாயின், அதனை ஆரம்பியாது விடுவதே முறை. மேலும் அரசியற் சச்சரவுகளை வேலை நிறுத்தங்களிற் புகுத்துவதும் சிறிதும் பொருத்தமாகாது.


### பாராளுமன்றத் தேர்தல்
காங்கேசன்துறைத் தொகுதி

வலிகாமம்-வடக்கு—காங்கேசன்துறைத் தொகுதிக்குப் புதிய அரசியல் திருத்தப்படி நிறுவப்படும் பாராளுமன்றத் தேர்தலில், ஏழைமக்கள் பலரின் வேண்டுகோட்கிணங்கி, ஒரு அபேட்சகனுக நிற்பதற்கு நான் முன் வருகின்றேன்.

இளையதம்பி-தாமோதரம் பிள்ளை
யாழ்ப்பாணம் மத்திய பஸ் கம்பெனி லிமிடெட்,
போக்குவரத்து அதிபர்

சுன்னுகம்
21-10.46


# பாதை ஓரத்தில்

★

பாட்டைசாரி

### 

ஸ்ரீ எச்.எம்.தேசாய் அவர்களை அறிமுகப்படுத்தவேண்டியதில்லை. இவர் இலங்கைவாழ் இந்தியரின் துயர்களைத் தீர்ப்பதற்காகப் பாடுபடுபவர். ஸ்ரீ தேசாயின் பல்லவிகள் வெள்ளைத் தேவதைகளுக்குப் பிடிக்கவில்லை. எனவே அத்தேவதைகள் ஸோல்பெரி மந்திரத்தை உச்சரித்து ஸ்ரீ சேனநாயகாவுக்கு உருப்போட்டிருக்கின்றன. ஸ்ரீ சேனநாயகா வெள்ளையரை நம்பி இலங்கையின் சுதந்திரத்துக்குப் பங்கம் விளைக்கின்ருர். இந்தியப்பிரச்சினையையும்விரைவிலே தீர்த்துவைக்கவுந் தயங்குகின்ருர். ஜவஹர்லால் நேருவுக்கும் மசியமாட்டார் போலத் தோன்றுகின்றது. பார்த்தார் ஸ்ரீ தேசாய். அவருக்குக் கோபம் வந்துவிட்டது. "ஸ்ரீ சேனநாயகா இலங்கை - இந்தியர்மீது வன்மம் சாதிக்கின்ருர். அவர்களைப்பற்றிஅவர் மிகத் தப்பான எண்ணங் கொண்டுள்ளார்" என்று ஸ்ரீ தேசாய் ஒரு கூட்டத்திற் தமது கோபம் தீரப் பேசினுர். ஆறுவது சினம்!

### நல்ல பாடம்!

டொக்டர் என்.எம்.பேரேரா அவர்களின் செல்வாக்கு, வேலை நிறுத்தத்துடன் உச்ச நிலையை அடைந்துவிட்டது. அரசியல் ஞானமும், உள்ளப் பண்பும் மிகுந்த இவ்வறிஞனைப் பொலிஸ் அதிகாரிகள் சமீபத்திற் கைது செய்த விஷயம் சம்பந்தமாக அரசாங்கசபையிற் காரசாரமான விவாதம் நிகழ்ந்தது. இப்போது கிடைத்த செய்தியின்படி டொக்டரைக் கைது செய்த இரு பொலிஸ் அதிகாரிகளையும் வேலையினின்றும் விலகும்படி ஒப்பந்தத்தின்படி அரசாங்கம் தெரிவித்திருக்கின்றதாம். இது மூளையிலே கிள்ளும் முயற்சியோ, அன்றேல் தொழிலாளரின் கோபத்தை யாற்றுவதற்கு ஒரு 'மருந்தோ' தெரியவல்லை.

### "சமாளிப்பேன்"

உணவு நெருக்கடி குறைவதாயில்லை. கூப்பன் மாவுதானும் சொற்பகாலத்துக்கு அகப்படாதெனத் தெரிகின்றது. 'பாண்' கடைகளுக்கு முன்னுல் ஜனங்கள் திரண்டு இடிபடுவதைப் பார்க்கும்போது 'மாவுக்கும் இவ்வளவு மதிப்பா' என்றுதான் சொல்லத்தோன்றும், ஆனுல் உணவு அதிகாரி ஸ்ரீ ஆழ்வாப்பிள்ளை ஏதோவிதமாக மாவுப் பஞ்சத்தைச் சமாளிக்கத்தனக்கு இயலுமென நிருபர் ஒருவருக்குத் தெரிவித்திருக்கின்ருர். மந்திரத்தால் மாங்காய் வீழ்த்தமுடியாதுபோனுலும் மாவு, மூடை மூடையாக வெளிக்கிளம்புமாகில் அது வரவேற்கத் தக்கது தான்!

### சாமிக்குக் கள்

கள் வெளியே கொண்டுசெல்வது சட்டவிரோதமானபடியால், மாத்தளை ஆசாமிஒருவர் இரண்டு கலன் கள்ளுடன் கையும் மெய்யுமாக அகப்பட்டுக்கொண்டார். யாரோ ஒருவருக்கு அம்மை நோய் கண்டபடியால் சாமிக்குக் கள் கொடுத்துக் காரியம் பார்ப்பதற்காக அந்த மனுஷன் இந்த வேலையைச் செய்தாராம். சொல்விளம்பியைக் கண்டு சாமிமாருந் துள்ளிக்குதிக்கத் தொடங்கிவிட்டால் அப்புறம் கள் அரக்கனுக்குச் சகலரும் 'ஜே' போட வேண்டியதுதான்!

### கேட்பாரில்லையா?

கள்ளை வெளியே எடுத்துச் சென்ருல் அரசாங்கம் தண்டிக்கின்றது. ஆனுல் கொள்ளை விலைக்கு மண்எண்ணெய் விற்கும் வியாபாரிகளின் அக்கிரமத்தைக் கேட்பாரில்லை. இப்போது சில நாட்களாகப் போத்தல் ஒன்று யாழ்ப்பாணத்தில் ரூ. 1-20 க்குத்தானும் கிடைப்பதரிது. ஆனையிறவுக்கப்பால் ரூ. 1-80 என்று தெரிகின்றது. புகைரதம் கவிழ்ந்ததைச் சாட்டாகக் கொண்டு இந்தமாதிரி அநியாயங்கள் நிகழ்கின்றன. அரசாங்கம் தகுந்த நடவடிக்கை யெடுத்து இத்தகைய அக்கிரமங்களை அகற்றவேண்டும். எமது பிரதிநிதிகள் எங்கே?

### நல்ல யோசனை

இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையே அதிக தூரமில்லை. கடல் மார்கமாகச் செல்வதாகில் 30 மைல்தான். ஆகவே இரு நாடுகளுக்குமிடையே போக்குவரத்தைத் துரிதப்படுத்துவதற்குச் சென்னை அரசாங்கம் முயற்சிக்கின்றது. கோடிக்கரையை அல்லது தூத்துக்குடியை ஒரு துறைமுகமாக்கினுல் எல்லாம் சுலபமாகிவிடும். இது விஷயத்தில் மந்திரி ஸ்ரீ பக்தவத்ஸலம் நல்ல ஊக்கம் எடுக்கின்ருர். சென்னை அரசாங்கம் கோடிக்கரையைத் துறைமுகமாக்கினுல் வடமாகாணத்திலும் ஒரு துறைமுகம் திறக்கப்படுமல்லவா?

### மலர்மணம்

இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையே பலவிதமான பாலங்கள் அமைக்கப் பலர் முயற்சி செய்கின்றனர். ஆனுல் தமிழ் நாட்டுக்கும் சிங்களத்தீவுக்குமிடையே தமிழ் பத்திரிகைகள் பாலம் அமைத்துவிட்டன. அப்பாடா! இம்முறை தீபாவலியை முன்னிட்டுப் பாரத நாட்டிலிருந்து வெளிவந்த விசேஷ மலர்களுக்கோ அளவுகணக்கில்லை. மலர்மணத்தை அதிகமாக உட்கொள்ள முடியாமல் மேசை முன்னிருந்து தவிக்க வேண்டியிருக்கின்றது. இப்படியெல்லாம் மூச்சுத்திணற வைத்திருக்கின்ருர்கள் தமிழ்நாட்டுப் பத்திரிகைக்காரர்கள். அவர்களை வாழ்த்துவதா அல்லது ஈழத்து மக்களை வாழ்த்துவதா என்று தெரியவில்லை!

# முன்னணியில் இந்தியா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிஸ்தான் வேண்டும் என்கின்றனர். இவர்களைப் படைகளாகக் கொண்ட ஜனுப் ஜின்னு அவர்களின் விஷமப் பேச்சுக்களையும் அபிப்பிராயங்களையும் பிரித்தானிய அரசினர்இதுவரையும்செவி சாய்த்து வந்தனர். கீழ்வங்காளத்திலுள்ள டெக்கா, நாஹோலி, திப்பிரா முதலிய பிரிவுகளில் வசிப்போர் பெரும்பான்மையோர் முஸ்லீம்கள்;சிறுபான்மையினர் இந்துக்கள். ஜனுப்ஜின்னுவின் நேரடி இயக்கத்திற்கேற்ப இப்பிரதேச முஸ்லீம்கள்செய்துவரும் அநியாயத்துக்கும் கொடுமைகட்கும் எல்லையில்லை. இவ்விடங்களிற் கொலை செய்யப்பட்டோர் 5000-த்துக்கு மேலாகுமென மதிப்பிடப்படுகின்றது. காயமடைந்தோர் கணக்கிலடங்கா. நூற்றுக் கணக்கான இல்லங்கள் தீக்கிரையாயின. ஐந்து லட்சம் சனங்கள் இவ்விடங்களைவிட்டு ஓடிவிட்டனராம். இதைவிட முஸ்லீம்கள்தொகையாகச் சென்று இந்துக்களைச் சில கிராமங்களிற் பலவந்தமாக மத மாற்றஞ் செய்துவிட்டனர். நூற்றுக்கணக்கான பெண்களைப் பலவந்தமாக விவாகஞ் செய்துவிட்டனர். பொதுசனங்கள் என்னசெய்வதென்றறியாது தவிக்கின்றனர். வங்காள தேசாதிபதியும் முதன்மந்திரி திரு. சுஹிர்வர்த்தியுமே இதற்குப் பொறுப்பாளராவர். கலகம் ஆரம்பித்தற்கு அடையாளங்கள் இப்பிரதேசங்களில் ஏற்படக் கண்டும் இவர்கள் வாளாவிருந்தது பெருங் குற்றமாகாதா?

### பலவந்தம் ஏன்?

ஜனுப் ஜின்னுவின் பாக்கிஸ்தான் என்னவாகுமென்று இப்போது யாவரும் அறிவார். சட்டத்துக்குக் கீழ்ப்படிந்து சமாதானமாய் வாழ அறியாதவர்கள், மற்றையோர் சமயத்தை மரியாதையுடன் மதிக்கவறியாதவர்கள், பலவந்தமாக மாற்றஞ் செய்பவர்கள், தேவாலயங்களை இடித்து அசுத்தப்படுத்துவோர் ஆகிய இந்த மிருகத்தன்மை கொண்டவர்களைத்தான் ஜனுப் ஜின்னு சோதரர்களாகக் கொண்டனர். இவர்சட்குப் பாக்கிஸ்தான் வழங்கிவிடின் பின் யாதாக முடியுமெனச் சொல்லவும் வேண்டுமா? முஸ்லீம் சங்கத்தைச்சேர்ந்த தலைவர்களே கீழ் வங்காளக் குழப்பங்கட்குக் காரணமாம். சிலர் பெரியமுஸ்லீம்களின் கூட்டங்கட்குத் தலைவராகச்சென்று கொள்ளையடிப்பதில் அதிகம் பங்குபற்றினராம். வங்காள அரசினர் இவைகட்கெல்லாம் என்ன பரிகாரஞ்செய்யப்போகின்றனரோ நாமறியோம். அரசியலை நடத்த அறியாது அளப்பருந் தீமைகளை விளைவிக்கும் மந்திரி சபையைக் குலைத்துத் தேசாதிபதி தாமாக அரசியலை நடத்தக்கூடாதா என்று கேட்கின்ருேம். முதன்மந்திரி சுஹிர்வர்த்தியின் அலங்கோலமான அரசியலுக்கு எல்லைவேண்டாமா?

### விஷமப் பிரசாரம்

இந்தியாவின் கலகங்கட்கெல்லாம் முஸ்லீம் தலைவர்களின் பொறுப்பற்ற பிரசாரங்களே காரணம் என்பதை எவரும் மறுக்க மாட்டார். பண்டிதர் நேரு அவர்கள் எல்லைப்புற மாகாணத்துக் கருகாமையிலுள்ள மலைநாட்டு வாசிகள் இருக்கும் பிரதேசங்கட்குச் சென்றபோதும் அளவில்லாத குழப்பங்கள் நடைபெற்றன. துப்பாக்கிப் பிரயோகங்கட்கும் எல்லையில்லை. பண்டிதர் நேரு அவர்களின் உயிருக்கும் அபாயம் வருமோவென்றும் சிலர் அஞ்சினர். எல்லைப்புறக் காந்தியாகும் கபர் கானும் காயமடைந்தனர். இக்கலகங்களை வேண்டுமென எழுப்பிவிட்டவர் ஜனுப் ஜின்னுவின் கட்சியே யென்பது யாவரும் அறிந்த விஷயம். மத்திய இடைக்கால அரசாங்கத்தில் முஸ்லீம் சங்கத்தினர் சேர்ந்த பின்னரும் அவசியமின்றி இக்கலகங்கள் நிகழ்வதாயின், முஸ்லீம்களின் மனப்பான்மையை என்னென்று கூறுவாம்? முஸ்லீம் தலைவர்கள் தமது ஆவேச பேச்சுகட்கு எல்லை கட்டவேண்டும், சமாதானத்தை நிலைநாட்ட முயலவேண்டும். அல்லாவிடின் இந்திய அரசினர் வேண்டிய வேண்டிய அடக்க முறைகளைக் கையாளப் பின்னிற்கக்கூடாது. இந்தியாவில் அவசியமின்றி உள்நாட்டுக் கலகம் ஏற்படின் அதன்பேருக வரவிருக்கும் தீமையும், சேதமும், நஷ்டமும் எவ்வளவாகுமென்பதைச் சொல்லவும்வேண்டுமா? முஸ்லீம் தலைவர் நாட்டின் நிலையை அறிந்து நிதானமாக நடப்பார்களாக.

### இலங்கைத் தமிழர் கலாவிருத்திச் சங்கம் கோலாலம்பூர்

மேற்படி சங்க மண்டபத்தில் வியனு புரட்டாதிமீ உகஙு-ல (6-10-46) பிற்பகல் 5மணிக்கு "என்செய்வோம்" என்னும் விஷயம்பற்றி கப்டன் இ. அ. காளகண்டன் அவர்கள் ஒரு அரிய சொற்பொழிவு நிகழ்த்தினுர்.

சிக்கனவாழ்வில் இலங்கைவாசிகள் ஆர்வம் குறைவதும் சமூகத் தொண்டு சங்கங்களில் உற்சாகம் குறைவதும் சிறுபிள்ளைகளுக்கு ஆரம்பக் கல்வி தாய்ப்பாஷையில் பயிலுவித்தலிற் சிரமம் குறைவதும் சிறுர்கள் சமயக்கல்வி பயிலாதிருப்பதும் இவைபோன்ற குறைகள் சமூகத்தின் அபிவிருத்திக்கு முரணுயிருக்கிறதென்று வற்புறுத்தினுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முது பெரும் புலவர்

## வெள்ளக்கால் முதலியார்

**ம**காவித்துவான், தமிழ்ப் பெருங்கவி, முதுபெரும் புலவர் ராவ் சாஹிப் வெ.ப. சுப்பிரமணியமுதலியார் G. B. V. C. அவர்கள் ஏறக்குறைய எழுபதின் மிக்க ஆண்டுகளாகத் தமிழ்த் தொண்டாற்றியவர். இன்று முதலியார் அவர்களைத் தமிழ் உலகம் இழந்து துன்புறுகின்றது. 'நாவலர்' என்பது ஆறுமுக நாவலரைக் குறிப்பது போன்று, 'முதலியார்' என்பது 'தமிழ் முதலியார்' ஆகிய வெ. ப. சுப்பிரமணிய முதலியார் அவர்களையே குறித்து நிற்கின்றது. முதலியாரின் வாழ்நாள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதி முதல் இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரையுமுள்ள காலம்—தமிழ் பலதுறையிலும் புத்துயிர் பெற்று விளங்கிய காலம்— 'மறுமலர்ச்சிக் காலம்' முதலியாரவர்களுக்கு 1-8-37-ல் தமிழன்பர்கள் எடுத்த எண்பதாமாண்டு வெள்ளணி விழாவில், திருநெல்வேலித் தமிழ் இலக்கிய சங்கத்தார் தங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளும்போது "சென்ற அறுபதாண்டுகளாக நெடுகிலும் தாங்கள் செய்துவந்த முயற்சி" என்றற்றெடுக்கத்து வாக்கியங்களால் முதலியார் அவர்களைப் போற்றினர். இறைவனருளால் மேலும் பத்தாண்டிருந்து தொண்டாற்றிய தமிழ்ப்பெரும் புலவர் பெருமானை 12-10-46 சனிக்கிழமையன்று தமிழ்உலகு இழந்தது.

1857-ம் ஆண்டு(கிஷூ) எட்டாந் திங்கள் பதினான்காம் நாள். பழனியப்ப முதலியாரின் மைந்தனுய்ப் பிறந்தார் முதலியார். இவர்தாம் இயற்றிய சுவர்க்க நீக்கம் (Paradise Lost Bk. I in Tamil Virutam 1895) என்னும் காப்பியத்தின் மொழி பெயர்ப்புப் பாயிரத்தில் (பக். அரு. செய்யுள் - கம, கக, கஉ)

"வழுதி நாட்டிடை வளவநா
டுற்றதே மானும்
பழுதில்சோழவந்தானெனும்
பழம்பதி யோனச்
செழிய நாட்டுறு சேரநா
டெனத்திகழ் தென்னம்
பொழில்வளம்பொலிவெள்ள
காற் புதுக்குடி புகுந்தோன்
'சுப்பிரமணியனென் பெயரன்
என் பெயரன்'
சாற்றும் அன்னவன் தனயன்
என் தனையன்எத் தலமும்,
போற்று மீப்புகழ்ப் பழநியப்
பேந்திர புனிதன்' என்று

குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

"நமது முதலியார் அவர்கள் உயர் குடும்பத்திலே பிறந்தவர்கள். உயர்தரக் கல்விகற்றவர்கள். உயரிய ஒழுக்கம் உடையவர்கள். இராசாங்கத்தில் உயர்ந்த உத்தியோகம் வகித்தவர்கள். ஆனால் அவர்கள் பெருமை இவ்வளவில் நின்றுவிடவில்லை. இன்று அவர்களைத் தமிழ் மக்கள் போற்றுகின்றார்கள் என்றால் அது அவர்களுடைய உயர்குடிப் பிறப்பும், பெரிய உத்தியோகநிலையும்பற்றியன்று. அவர்கள் தமிழ்மொழியின் பால் பேரன்புபூண்டு, தமிழ் நூல்களை நன்கு கற்றுத் தமிழில் புத்தம்புதிய நூல்களை யியற்றித் தமிழ்த்தாய்க்கு அருந்தொண்டாற்றியவர்கள் என்பதற்காகத்தான்". என்று அழகாகக் கூறியுள்ளார்கள் நீதியந்தலைவர் திரு. தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான் M. A. அவர்கள். (முதலியார் அவர்களும் அவர்களுடைய நூல்களும். பக்.30)

முதலியார் அவர்கள் இயற்றிய நூல்களின் பெயர்கள் பின்வருமாறு: 1. சுவர்க்க நீக்கம், 2. கோம்பிவிருத்தம், 3. கல்வி விளக்கம், 4--6. கால்நடைமருத்துவ நூல்கள், 7. நெல்லைச்சிலேடை வெண்பா, 8. அகலிகை வெண்பா, 9. தனிக்கவித்திரட்டு, 10. இராமாயண உள்ளுறை பொருளும் தென்னிந்திய சாதி வரலாறும், 11. கம்பராமாயண சாரம் (உரை), 12. கம்பராமாயணத்தையும் பெரிய புராணத்தையும் எரிக்கும் முயற்சி. 13. பகவத்கீதை-கும்மி, 14. சருவசன செபம், 15. ஆறுமுக நாவலர் சரித்திரம் செய்யுள் பரிசோதிப்பு. (1898) முதலியாரை.

இவற்றால் இவர் 'பாவரும் கிழமை' வாய்ந்த பெருங்கவி என்பதும், பாகமுடனே—நாவலர் நடையிற் பைந்தமிழ் வசனம் எழுதும் ஆற்றல் வாய்ந்தவர் என்பதும், மொழிபெயர்க்கும் ஆற்றலிலே தலைசிறந்தவர் என்பதும் உண்மை மதம் இதுவென்பதை உய்த்துணர்ந்த பெரியார் என்பதும் நன்கு விளங்கும். இவரியற்றிய செய்யுள்களுள் ஒரு சில,

— மா. பீதாம்பரன் —

'ஒருமதத் தையும்வி ரோதியா
மல்மதம்
ஒன்றுக்கொன் றுள்ளபே
தங்கள் தமைச்
சரிசெய்து சர்வ மதசாரம்
யாவையும்
தன்பாலுளதே தகுந்த மதம்
உண்மைக்கு மேலாம்
மதமில்லை; எல்லா
உயிர்க்களின் மிக்கதோர்
பக்தியில்லை!
வண்மைக்கு மேலுப
காரமில்லை, நல்
வசனத்தின் மேலுப சாரமில்லை.

"வலைபு மெய்கிழமாகியும் மனங்கிழ
மாகா தொளிரு மூப்பினர்"

என்னும் முதலியார் வாக்கிற்கு இலக்கியமாய் வாழ்ந்த முதலியார் அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி ஒழுகும் எவனும் உயர்நிலை எய்தாதிரான். முதலியார் அவர்களின் மாணுக்கனும், நண்பனும் உழுவலன்பனும் முதலியார் வரலாற்றாசிரியரும் ஆகிய புலவர் நீதியந்தலைவர் திரு. தொ. மு. தொண்டைமான் M. A. அவர்கள் சிறியேற் கெழுதிய கடிதத்தில் "அவர்கள் செய்த சேவையைத் தொடர்ந்து நடத்துவதே நமது கடமை" என்றபடி இதுவே முதலியார் அவர்கட்கு யாம் செய்யும் பெருங் கடமையாகும்.

---

உ

## திருமணம்

### சிவசம்பு — செல்லாச்சியம்மாள்

நிகழும் வியஞு ஐப்பசிமீ 21ங்உ (6-11-46) புதன்கிழமை பகல் 1.37 மணிக்குமேல் 2.45 மணிக்குள்ளாக வரும் சுபயோக சுபமுகூர்த்தத்தில், **அளவெட்டி வடக்கு ஸ்ரீமான் சி. கதிரித்தம்பி** அவர்கள் புத்திரன், திருவளர் செல்வன் **பண்டிதர் க. சிவசம்பு**வுக்கும் (ஆசிரியர், கொழும்பு விவேகானந்த வித்தியாலயம்), **அளவெட்டி வடக்கு ஸ்ரீமான் நா. நாகலிங்கம்** அவர்களின் ஏகபுத்திரி திருவளர் செல்வி **செல்லாச்சியம்மா**ளுக்கும், பெரியோர்கள் திருமணம் செய்ய நிச்சயித்திருப்பதால், சுற்றத்தார்களும், நண்பர்களும், அத்தருணம் சமுகமாயிருந்து தம்பதிகளை ஆசீர்வதித்தேகுமாறு வேண்டப்படுகின்றனர்.

**திருமணம் மணமகளில்லத்தில் நடைபெறும்.**

அளவெட்டி-வடக்கு
**சுன்னுகம்.** 31-10-46

[2941]

---

# நமது வாசிகசாலை

'நமது வாசிகசாலையில் விமர்சனத்திற்கு நூல்கள் அனுப்புவோர் ஒவ்வொன்றிலும் இரண்டு பிரதிகள் அனுப்புதல் வேண்டும். மதிப்புரை விரும்புவோர் இதைக்கவனிப்பார்களாக.

**காந்தீய நவநீதம்:** ஆசிரியர்: மஷ்திலாலா. மொழிபெயர்ப்பு: கோ. கிருஷ்ணமூர்த்தி. பதிப்பாசிரியர்: பிரமஸ்ரீ தமிழ்நாடு வெளியீடு, 33 பிராட்வே, சென்னை. பக். 188. விலை ரூபா ஐந்து.

**ம**தம், சமயம் முதல் ஸ்தாபனங்கள் என்பதீறுய விஷயங்களில் மகாத்மா காந்தியால் கூறப்பட்ட உபதேசங்களைத் தொகுத்துக்கூறுவது இந்நூல். 'நவநீதம்' 'புதுமை' எனப் பொருள்படும். இவ்வுபதேசங்களைப் பெரும்பாலும் இயற்கையோடியைந்த பழமை வாய்ந்தனவெனினும் இவையனைத்தும் கைநெகிழவிடப்பட்ட இக்காலத்தில் இந்நூல் நவநீதம் என அழைக்கப்படல் பொருத்தமுடைத்து. 'சமூகம்' என்ற அத்தியாயத்தில் 'வர்ண ஆச்சிரம தருமம்' என்ற விஷயம் நன்கு காந்தீயத்துக்கியைய விளக்கப்பட்டிருக்கிறது. தர்மம் என்ற சொல்லுபயோகமே சாதிக்கட்டுப்பாடுகளின் இறுகிய கூட்டைப் பிளக்கும் கோடரியாமாறு விளக்கப்பட்டிருக்கிறது. மேற்படி அத்தியாயத்தில் காதல் மணத்தைப் பற்றிய காந்தீயக்கொள்கை பின்வருமாறு கூறப்பட்டிருக்கிறது:

'மணத்தைக் கோரும் ஆணோ பெண்ணோ தானே துணையைத் தேர்ந்துகொள்வது சாதாரணமாக விரும்பத்தக்கதல்ல. இதில் அடிக்கடி உள்ள வியபசாரமும் சில சமயம் உடல் வியபசாரமும் நடப்பதற்குச் சந்தர்ப்பமுண்டாகும். தவிர, அநுபவம் குறைவாயுள்ள வாலிபமாகையாலும் போக ஆசையாலுண்டாகும் வெறியாலும் செய்யப்படும் முடிவு அறிவுக்கு உகந்ததாயிருத்தல் ஓரளவுக்கே சாத்தியமாகும்'' என்பது.

சுத்தமும் ஆரோக்கியமும் கல்வி, இலக்கியமும் கலையும், ஸ்தாபனம் முதலிய அத்தியாயங்களில் வாசித்து அறிந்து ஒழுகவேண்டியன மிக அதிகம் இருக்கின்றன. சுத்தமும் ஆரோக்கியமும் என்ற அத்தியாயத்தில் பின்வருவது ஒருவசனப்பகுதி. 'அருவருக்கத்தக்க வசைச் சொற்களைச் சொல்வதும் ஒருவகையில் அசுத்தமேயாகும்' என்பது. மருந்துகளை நம்பாதிருக்கும்படி காந்திஜி கூறுகிறார். ஏழைமைகாரணமாகப் மக்கள் புலாலுண்ணலை அவர் அநுமதிக்கிறார். கல்வியைப்பற்றிக்கூறும்போது 'மக்களின் ஜீவனோபாயத்துக்கு ஏற்பாடு செய்யாமல் பண்பாடு என்னும். கடவுள்—தத்துவம் என்றும் போதனைசெய்யமுயலுதல் வீணாகும்' என்று கூறுகிறார்.

ஆங்கிலபாஷை அடிமைநாடுகளிற் பரப்புதல் பற்றிக் காந்திஜி '......சில ஆங்கிலேய அதிகாரிகளுக்கு நாட்டுப்பாஷைகளைக் கற்பதிலுள்ள சிரமம் இல்லாதிருப்பதற்காக மக்கள்மீது ஆங்கில பாஷைச் சுமையை ஏற்றுதல் என்பது பிரிட்டிஷ் சர்க்காருக்கு நாடு செலுத்தும் ஒருவகைக் கப்பமேயாகும்' என்றார்.

'நாம் சொந்தப் பாஷையை... சுத்தமாகப் பேசி எழுதவில்லையென்றால் வெட்கப்படுவதில்லை. ஆனால் ஆங்கிலத்தில் பிழைசெய்தால் நாணுகிறோம். பிறர் பிழைவிட்டால் கேலிசெய்கிறோம்......
என்றும் கூறுகிறார்.

'இலக்கியமும் கலையும்' என்ற அத்தியாயத்தில் கூறப்பட்ட இலக்கியம் எது, இலக்கியநடை, மொழிபெயர்ப்பு இம் மூன்றும் இக்கால இலக்கியச் சண்டைகளுக்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்குமென எண்ணுகிறேன். இந்நூல் மொழிபெயர்ப்பு காந்திஜி மொழிபெயர்ப்பு நூல்கள் எங்ஙனமிருக்கவேண்டும் என்றுகூறும் இலக்கணம் முழுவதும் அமைந்ததாகக்கூற முடியாது. மொழிபெயர்ப்பில் சில எழுத்துப் பிழைகள் (ர ற.) கஸ்பா' முதலிய விளக்கக்குறைவான சொற்கள் (பக்.150) 'சலித்தமண்' கோரும் முதலிய மரபற்ற சொற்கள் சில இடங்களில் அநாவசிய சொற்பெருக்கம் (பக். 36–72) இல்லாதிருப்பின் மொழிபெயர்ப்பும் நூலைப்போற் சிறப்புடையதாயிருக்கும்.

— வ. நடராஜா

**புதியகதர் இயக்கம்:-** சர்க்கா சங்கத்தில் காந்திஜி நடத்திய சர்ச்சை. பிரசுரம்: தினமணி வெளியீடு; தினமணி காரியாலயம். 100 மவுண்ட் ரோடு, சென்னை. பக்கம்: 136; விலை: அணு 12.

ஏற்கனவே இந்நூல் ஹிந்தியில் வெளியிடப்பட்டது. ஏழு பாகங்களாக அமைந்துள்ள இந்நூல் கதர் இயக்கத்தின் அமைப்புகளைச் சாஸ்திர முறைப்படி கூறுகின்றது. அத்துடன் ஊழியர்களின் இலட்சணங்களையும் அஹிம்சையின் சின்னமாக விளங்கும் சர்க்காவைப்பற்றியும் இதுவிபரமாக விளக்குகின்றது. "நூலின் இழையில் சுயராச்சியம்'' என்ற தத்துவத்தைப் போதிக்கும் காந்திஜியின் கருத்துக்கள் இதில் நிறையவிருக்கின்றன. 'மில் ஒழிக' என்ற கிளர்ச்சி சென்னைப்பிரதமர் ஸ்ரீ பிரகாசம் ஏற்படுத்திபிருக்கும் இந்நாட்களில் புதிய கதர் இயக்கம் காலத்துக்கேற்ற ஒரு பிரசுரமாகும்.

**மதுபானம் ஒழிக-:** தொகுத்தோன்: கே. ஆர். கல்யாணராம ஐயர். பிரசுரம்: தினமணி வெளியீடு, தினமணி காரியாலயம், 100, மவுண்ட் ரோடு. சென்னை. விலை: அணு 3.

**ம**துவிலக்குப் பிரசாரத்துக்கு உதவியாகுமென்ற உயர் நோக்கத்துடன் வள்ளுவர் குறளிலிருந்தும், மகாத்மாவின் மணிவாசகங்களிலிருந்தும் ராஜாஜி போன்ற அறிஞர்களினது போதனைகளிலிருந்தும் தொகுக்கப்பட்ட இம் மணிமொழிகளும் பாடல்களும் நிறைந்த இச்சிறு நூல் படித்துப் பயன் பெறத்தக்கது, —இ. அ.

### விசேஷ மலர்கள்

**பாரதமணி:** சரஸ்வதி பூஜா மலர். ஆசிரியர்: கா. சி. வேங்கடரமணி. விலாசம்: 34 அலமேலுமங்காபுரம், மைலாப்பூர் சென்னை. விலை அணு 8.

**இ**ம்மலரில் கலை, இலக்கியம், விஞ்ஞானம் சம்பந்தமான கட்டுரைகள் விசேஷ இடம் பெறுகின்றன. சிறுகதைகளுமுண்டு. திரு. வி. க: அவர்களின் கவிதை உயர் கருத்துக்களுடன் விளங்குகின்றது. தமிழ்மக்களுக்குப் பழக்கமான எழுத்தாளர்கள் பலர் இம்மலருக்குக் கட்டுரைகளும் கதைகளும் எழுதியிருக்கின்றனர். இது விசேஷமலராகையால் நல்ல பல சித்திரங்களுடன் வெளியிட்டிருக்கலாம்.

**தமிழ் உலகம்:** தீபாவலி மலர். விலாசம்: 5 சுங்குராமசெட்டி தெரு, சென்னை. விலை அணு 6.

**ந**ல்ல கட்டுரைகளுடனும் கதைகளுடனும் வெளியிடப்பட்டிருக்கும் இம் மலருக்கு கி. வா. கி. கா ஸ்ரீ. ஸ்ரீ. 'ஆர். வி.' பார்த்தசாரதி 'சுரபி' ஆகியோர் தனிச்சிறப்பு அளிக்கின்றனர். ஸ்ரீ நடராஜனின் கட்டுரை கலை சம்பந்தமான சங்கதிகளை வெளிப்படுத்துகின்றது.

மலரின் விலை சொற்பந்தான், ஆனால் விஷயங்கள் நிறையவுண்டு.

**சுதந்திர இந்தியா:-** Free India -ஆங்கில வாரப் பத்திரிகை விசேஷ இதழ். ஆசிரியர்: E. R. கோவிந்தன் *Address*: 53, General Patters Road, Mount Road, Madras. விலை அணு 8.

தசராவிழாவின் போது வெளிவந்துள்ள இவ் விசேஷ இதழ் சிறந்த ஆங்கிலக் கட்டுரைகளுடன் விளங்குகின்றது. காந்திஜியின் சில அருமையான படங்கள் அழகாகவிருக்கின்றன. பத்திரிகை உலகிற் பிரசித்தி வாய்ந்த ஸ்ரீ இராம் ராவு அவர்களின் கட்டுரை உயர்வானது. கதைகளும் வேறு இனிய கட்டுரைகளும் உண்டு.

**பாரிஜாதம்:** மாதப் பத்திரிகை. ஆசிரியர்: வஸந்தன். பிரசுரம்: பாரிஜாதம் காரியாலயம், புதுக்கோட்டை. வருட சந்தா ரூபா 6–00. தனிப்பிரதி விலை அணு 8.

**ஸ்ரீ** வி. எஸ். ராமகிருஷ்ணன் (வஸந்தன்) அவர்களை ஆசிரியராகக்கொண்டு பாரிஜாதம் தமிழ்நாட்டில் மலர்ந்திருக்கின்றது. நறுமணமும் வீசுகின்றது. முதல் இதழைப்போலவே ஏனைய இதழ்களும் வெளிவருமாகில் ஆசிரியர் தமிழ்நாட்டில் புகழ் நாட்டுவார் என்று துணிந்து கூறலாம். பாரிஜாதம் எழுத்தாளர்களின் நல்ல சிருஷ்டிகளுக்குச் சன்மானம் அளிக்கத் திட்டம் போட்டிருக்கின்றது. சகல வாசகர்களுக்கும் திருப்தியளிக்கும் விஷயங்கள் இதிற் காணப்படுகின்றன. வஷந்தன் தொடர்கதை ஆரம்பித்துள்ளார். ஸ்ரீ ஜி. என். பி. எழுதியிருக்கும் சங்கீதக் கட்டுரை படித்து ரஸிக்கத்தக்கது. சித்திரங்கள் ஒரு தனிச்சிறப்பு. கவி தேசிக விநாயகம்பிள்ளை, ஸ்ரீ காமராஸ் நாடார், 'சுதேசமித்திரன்' ஸ்ரீனிவாசன், சேர் ஸி. பி. ராமஸ்வாமி ஐயர், ஸ்ரீ வ. ரா. 'தினசரி' சொக்கலிங்கம் போன்ற பிரமுகர்கள் மலரை வாழ்த்துகின்றனர். பைந்தமிழ்ப் பாரிஜாதம் சந்ததம் வாழ்க.

**பாலர்கதைகள்:** பதிப்பாசிரியர். அழ. வள்ளியப்பா. பிரசுரம்: தமிழ்நிலையம், புதுக்கோட்டை விலை அணு நான்கு. யாழ்ப்பாணத்திற் கிடைக்குமிடம்: பூலபாலசுங்கம் புத்தகசாலை, பெரியகடை, யாழ்ப்பாணம்.

அழகான சின்னஞ் சிறிய இப்புத்தகத்தில் குழந்தைகள் படித்து மகிழத்தக்க நல்ல கதைகள் உண்டு. பெரும்பாலும் இக்கதைகள் சிறுவர்களால் எழுதப்பட்டவை. குழந்தைகளின் உள்ளங்கள் வளர்ச்சி பெறத்தக்கமுறையில் அனுபவம் வாய்ந்த பெரியோர்களின் கதைகளும் இதிற் சேர்க்கப்பட்டலாம்.

---

### எட்டாம் வகுப்புத் தேர்தற் பரீட்சை 1946

1. வித்தியாதிகாரிகள் ஒழுங்கு செய்த பரீட்சை ஸ்தானங்களில் 1946-ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 13-ம் 14-ம் திகதிகளில், மேற்குறித்த பரீட்சை ஆங்கிலம், சிங்களம், தமிழ் ஆகிய மூன்று மொழிகளிலும் நடாத்தப்படும்.

2. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்ப அட்டவணைகள் பாடசாலை இருக்கும் வட்டாரத்துக்குரிய வட்டார வித்தியாதரிசி 1946ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 26-ந் திகதிக்குப் பிந்தாமல்; பெற்றுக்கொள்ளத்தக்கதாக அனுப்பப்படவேண்டும்.

3. அவ்வவ் மாகாணத்துக்குரிய வித்தியாதிகாரியிடம் பரீட்சை விதிகளின் பிரதிகளையும் விண்ணப்ப மாதிரிப் பத்திரங்களையும் பாடசாலை முகாமைக்காரர்களும் தலைமை ஆசிரியர்களும் பெற்றுக்கொள்ளலாம்.

4. சகல அரசினர் பாடசாலைகளும் இப்பரீட்சையில் பங்குபற்றவேண்டும், உதவி நன்கொடைப்பணம் பெறும் பாடசாலைகள் 1946-ம் ஆண்டுப் பரீட்சையில் விரும்பின் பங்குபற்றலாம்.

இயன் சான்டிமன்
கொழும்பு, வித்தியாதிபதி.
14–10–1946. — [2943]

---

### தேகவியோகம்

**ஸ்ரீமதி லக்ஷ்மியம்மாள்**

கலாநிதி அச்சியந்திரசாலை அதிபர் அவர்களின் மனைவி சௌபாக்கிய லக்ஷ்மியம்மாள் (26-9-46) வியாழக்கிழமை காலை தம்பனை (பருத்தித்துறை) யிலுள்ள தமது இல்லத்தில் இறைவனடி எய்தினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இராமசாமியும் மீனுட்சியும்

'உருளிவெள்ளி' தோட்டத்திலே ஒரு குடும்பம் பலகாலமாக வாழ்ந்து வந்தது. காற்று மழை என்று கருதாது அன்ருடம் மிகவும் கஷ்டப்பட்டு உழைத்துண்டு வாழ்ந்த குடும்பம் அது. அக்குடும்பத்தில் மீனுட்சி என்று ஒரு குழந்தை பிறந்து வாழ்ந்து வந்தாள். தாய் தகப்பன் வேலைக்குப் போய்விடும் நேரத்தில் மீனுட்சி தன் பாட்டியுடன் மற்றைய சிறு குழந்தைகளைத் தாலாட்டும் வேலையில் ஈடுபடுவாள். தோட்டப்பாடசாலைகளிற் கல்வி கட்டாயப்படுத்துவதில்லை ஆதலால் வேறும் பிள்ளைகள் மீனுட்சியுடன் கூடிவிடும்.

ஒருநாள் தோட்டத்திற்கு நானும் நண்பனும் போனேம். மீனுட்சி ஒரு பாவைப்பிள்ளையை வைத்துப் பராக்குக் காட்டினுள்:—

அந்தப்பட்சி இந்தப்பட்சி
எந்தப்பட்சி சாமி, எந்தப்பட்சி
அருமையாக நான் வ்ளர்த்த
என் தங்கச்சி,
அது சோறுதின்னும்பால்குடிக்கும்
சோபபுப்போட்டு மேல்குளிக்கும்

என்ருள்.

நாங்கள் இட்டப்போக, எங்களைக் கண்டுவிட்டு ஓடிவந்து பாட்டுப்பாடிக் காசு வாங்க கெஞ்சிநின்ருள்.

"அடி பிள்ளே! இன்னும் பாடு பார்ப்போம்" என்றேன்.

"இட்டுக்கிருப்போலே இட்டுக்கிறும்
ஒருசாந்துபோட்டும் இட்டுக்கிறும்
மாட்டிக்கிருப்போலே மாட்டிக்கிறும்
ரவுக்கைஒண்ணு மாட்டிக்கிறும்
கட்டிக்கிருப்போலே கட்டிக்கிறும்
சேலைஒண்ணு கட்டிக்கிறும்" என்ருள்

**அ. வி. ம.**

நாம் இப்படியாகப் பேசிக்கொண்டு நிற்பதை அருகிலுள்ள கிணற்றிலிருந்து தண்ணீர் அள்ளிக்கொண்டுவந்த தோட்டப் பெண்கள் நின்று பார்த்தார்கள், இதனை மீனுட்சியுடன் நின்ற ஒரு சிறுவன் கண்டான். இவன் ஒரு குறும்பன்—ஆனலும் வரகவி!

"படுகிணற்றுக்குத் தண்ணீருக்குப்
போய்
பார்க்கிருப்போலே பார்க்கிரு
ஓர்கிணற்றுக்குத் தண்ணீருக்குப்
போய்
ஒதுங்கிருப்போலே ஒதுங்கிரு
இருகிணற்றுக்குத் தண்ணீருக்குப்
போய்
இருக்கிருப்போலே இருக்கிரு"

என்றுவிட்டான் பெண்களுக்கு ஆத்திரம் வந்துவிட்டது, திட்டினூர்கள். உடனே நாங்கள் இருவரையும் சமானப்படுத்தி இன்னும் பாட்டுக்கேட்க முற்பட்டோம். இதைக்கண்ட பெண்களுள் கிழவி ஒருத்தி பழமொழியாக:—

சுடுகாட்டைப் பெருக்கித்தள்ளிப்
பெருவிளக்கேற்றினலும் வீடாகுமோ,
எருக்கலம்பூமொட்டு ஏகமாய்ப்பூத்
திட்டாலும்
மருக்கொழுந்திற்குண்டாம் வாசனை
யுண்டோ,

என்று பாடினுள். பின்பு பிள்ளைகளைத் துரத்தினுள்.

மீனுட்சிக்கும் அவள் சினேகிதனுக்கும் கோபம்வர அவர்கள் 'இரட்டைத்தாழ்' போட்டாற்போல

'சொன்னபடி கேட்கமாட்டோம்
சோழஞ்சோறு தின்னமாட்டோம்
நரைத்த கிழவியுடன்
நாமிருந்து வாழமாட்டோம்—

என்று இசைத்தார்கள்.

மீனுட்சியின் கையைப்பற்றி அவள் நண்பன் கையில் அமர்த்திக்கொண்டு அவனுடைய பெயரை அவளிடம் கேட்டேன். சிறுமி வெட்கப்பட்டு—'அவன் எங்க மச்சான் சேர்' என்றுவிட்டு நகைப்பொடு தலைகுனிந்தாள். அருகிலிருந்த குழந்தை—'ஆசாமி அண்ணு உவன்தான் சேர்' என்றது. இவ்விருவரின் கைகளுக்கூடாக ஓர் உணர்ச்சி பரஸ்பரம் மாறிமாறி ஓடியதை உணர்ந்தேன். இரண்டு சிறு கைகளின் மேலும் 'சக்கர வட்டங்கள்' வைக்க எண்ணி தோல் உரிமையுள் ஆராய்ந்தேன். சிறிது தாமதமானது, 'ஒரு பாட்டுவேண்டு'மென்றேன். உடனே அவர்கள் இருவரும்:—

கடல்மேலே கப்பல்பார்
கப்பல்மேலே தட்டுப்பார்
தட்டுமேலே வோட்டுப்பார்
வோட்டுமேலே போயாபார்
போயாமேலே ஆயாப்பார்
ஈயார்வீட்டார் கையைப்பார்
தருமதுரைகளே
ஈயார்வீட்டார் கையைப்பாருங்கோ

என்றுவிட்டார்கள்.

கைகளிடையே சில வெள்ளி நாணயங்கள் விழுந்தன. ஆயினும் அவை போதவில்லை. இன்னும்:—

பார்க்க வடிவானபாட்டு
மகிழ்வுடனே கேட்டு—உங்கள்
சோப்புக் கையைப்போட்டு
இழுத்துவிடுங்கள் நோட்டு—
துரைகளே
இழுத்துவிடுங்கள் நோட்டு

என்று பாடி ஆடினூர்கள். இது முடிந்தது.

பின் இவர்களுடைய நிலைபரத்தைப்பற்றி நண்பர்விசாரித்தார். அதற்குஅவர்கள்புன்னகையோடுபாடிப்பாடிமறுமொழி கொடுத்தார்கள். தாய் நாடாகிய சுதந்திர இந்தியாவே தமக்குப் புகலிடமென்றும் தாம் போகும் போது பின்வருமாறு பாடிச் செல்வதாகவும் கூறினர்:-

கொச்சிக்கடே கபுரியப்பு கௌதரு
சிய துன்னே
காதுகுத்தி கடுக்கனிட்டு கடயமிட்
டுமன்னே
மின்னிவரும் பறந்துவரும் சலங்கை
கட்டிச்சாவல்
ஓடவைத்தும் உறுமவைத்தும் ஓடிய
தண்ணீரில் பாயிழுத்து
சலசங்கி டாங்கிபோல தங்கக்கப்பல்
பக்கீர் தம்பியைப் பாயாய் விரித்து
காரைமலர் சூரைமலர் கப்பலிலேற்றி
காரான மாப்பிள்ளையைக் காவலுக்கு
வைத்து
நொண்டிக்குட்டியைச்சிம்மாசனத்தில்
வைத்து
கௌதார சய்பாவைக் கயிறுய்த்
திரித்து
கிழுகிறுஎன்று சுற்றுதடா சிங்காரக்
கப்பல்
ஏலே ஏலோ ஏலேலோ.


என்பது அவள் பாட்டு.

நாங்களும் ஈற்றில் ஒரு பாட்டுப்பாடி அவர்களை வாழ்த்திவிட்டு திரும்பினேம்:—

"பொட்டிட்ட நெற்றிக்கும்
பூவர்ணச் சேலைக்கும்
பாவையின் வளத்திற்கும்
அமுதத்தை ஊட்டி அம்மை
சீராட்டிவளர்த்த நங்கை (வேறு)
யாருக்கு அகப்படுமோ?
(இல்லை என்கிறது.)


எப்பொழுதும்

தன் - நம்பிக்கை



தேகபுனிதத்தால் உண்டாகிறது..

விளையாட்டில் அவளுக்கு வெற்றி! தகுதியும், புனிதமும் முழுத் தன் - நம்பிக்கையுமிருந்தால் அவள் வெற்றி நிச்சயம். தினசரி லைவ்போய் ஸ்நானமே இதற்குக் காரணம். தேக புனிதம் வாழ்க்கையின் சரியான தோற்றத்தைக் கொடுப்பதோடு உமது சகல தொழில்களிலும் தன்நம்பிக்கையைத் தருகிறது. விசேஷ துணைப் பொருள்களை யுடைய லைவ்போய் தேகபுனிதத்தை உறுதிப்படுத்துகிறது. உமது முகத்துக்கும் கைகளுக்கும் உபயோகிக்கவும். ஏனெனில் இம்மாதிரியான அழகு சோப்புகளிலும்பார்க்க லைவ்போய் 20% மென்மையானது.




லைவ்போய்
டொயிலட்
சோப்

LBT 13-169 LEVER BROTHERS (CEYLON) LIMITED

ஆசிரியருக்குக் கடிதம்

# தமிழ்க் காங்கிரஸும் தலைவர்களும்

தமிழ்க் காங்கிரஸ் தலைவர்களின் செய்கை, நமக்கு குரங்கினதும் தூக்கணங் குருவிகளினதுங் கதையைத் தான் நினைப்பூட்டுகின்றது. ஒரு நாட்டின் மக்களிடையே சமாதானத்தையும், சந்தோஷத்தையும் நிலவச் செய்ய முடியாவிட்டாலும் விரோதத்தையும், பொருமையையும் வெகு அழகாகச் செய்து காட்டுகின்ருர்கள் தமிழ்க்காங்கிரஸ் தலைவர்கள்.

யாழ்ப்பாணத் தமிழர்கள் என்றமே ஒற்றுமைக்குப் பேர்போனவர்கள். தங்களுக்குள் பல ஆயிரம் பாகுபாடுகள் இருப்பினும் மாற்ருனுக்கு இடம் கொடுக்க மாட்டார்கள். உதாரணமாக இன்றையதினம் மட்டக்களப்பான், திருக்கோணமலையான் என்று சொல்லிக் கொள்பவர்கள் அன்றையதினம் நாங்கள் யாழ்ப்பாணவாசிகள் எனத்தான் சொல்லிக் கொண்டனர். 50-க்கு 50 என்ற ஓலம் கேட்குமுன்னர் இலங்கையில் தமிழர்களும் சிங்களவர்களும் நேசபாவத்துடன் தான் இருந்து வந்தார்கள். ஆனல் இன்றையதினம் முற்றிலும் நேர்மாருகவே காணப்படுகின்றன. இதற்குக் காரணம் தமிழ்க்காங்கிரஸ்தான்.

ஸ்ரீ பொன்னம்பலம் அவர்கள் 50-க்கு 50-பது என்ற சுலோகத்தைக் கிளப்பினூர். தானும் ஒரு ஜின்ஞ ஆகவேண்டுமென்று நினைத்தாரோ என்னவோ, எனக்குத் தெரியாது. ஆனல் ஒன்றை மட்டும் நாம் காண்கின்றேம். அது தான் தமிழர்களுக்குள்ளே யேபல ஆயிரம் பிளவுகள்: தமிழர்—சிங்களர் வேற்றுமை.

சோல்பரி சிபார்சு வந்த சமயம் ஸ்ரீ பொன்னம்பலம் லண்டனில் நின்ருர். ஏன் உடனே அவர் ஓடிவரவில்லை. வீ. வைத்தியலிங்கம் என்பவரும் இந்தியாவிலிருந்து வரவில்லை என ஒரு பத்திரிகை குறைகூறுகின்றதே.

தமிழ்க்காங்கிரஸின் அங்கத்தவர் ஒருவரின் பேச்சும் செயலும் முன்னுக்குப் பின் முரணுகவே இருக்கின்றன. இந்தியாவில் ஜின்ஞ சம உரிமை கேட்கும் போது இவர் தன் கையிலிருந்து கொடுப்பதுபோல் அது எப்படிக் கொடுக்கமுடியும். இந்துக்கள் தானே பெருந்தொகையினர் என்று கூறுகின்ருர். ஆனல் இலங்கையிலோ சம உரிமை கொடு. இல்லையேல் சண்டித்தனம் செய்வோம். உலகம் போற்றும் உத்தமன் காந்தி ஏனையோருக்கு உண்மைக்காகவும், சத்தியத்திற்காகவும் சத்யாக்கிரகம் எனும் உயரிய ஆயுதத்தைக் கொடுத்தார். ஆனல் நாங்கள் அந்த ஆயுதத்தை எங்களின் சண்டித்தனத்திற்குப் பயன்படுத்திக்கொள்வோம் என இயம்புகின்றனர். இதுதான் தமிழ்க்காங்கிரஸின் நிலைமை. அவர்களது ஒரே கொள்கை யாரை ஏமாற்றி, வரும் பொதுத் தேர்தலில் வெற்றி பெறலாம் என்பது. அதற்காக என்னவேண்டுமானலும் செய்வார்கள். தங்கள் கட்சியின் கொள்கையைக் கூட மாற்றிக்கொள்ளத் தயங்கமாட்டார்கள். ஒற்றுமை என வாயால் வானளாவப் பேசுவார்கள். ஆனல் செயலிற் காட்டும்போது சண்டையைக் காட்டுவார்கள்.

ஸ்ரீ பொன்னம்பலம் அவர்கள் நன்கு கல்விகற்ற அறிவாளியாக இருக்கலாம். பேச்சிலே தீரராக இருக்கலாம். அவைகளைச் சரியான வழியிற் பயன் படுத்திக் கொள்ளவேண்டும். தன் சுயநலத்திற்காகவும் தன்னைச் சார்ந்தோர்களின் சுயநலத்திற்காகவும் ஒரு சமூகத்தைக் கெடுக்கக் கூடாது.

மேலும் ஒருவர் உண்மையை உரைத்தால் அதைப்போற்றிப் புகழ்த்தல் தகும். அதை விடுத்து அவரை எள்ளி நகைத்தல் தவறு. இன்றையதினம்தமிழர்களின்காங்கிரஸில் இரண்டொரு இந்தியத் தலைவர்களும் இருக்கின்றனர் (என சொல்லிக்கொள்ளப்படுகின்றது.) இவர்கள் சபைகளிற் கைதூக்கிய பழக்கத்தால் இங்கும் அப்படியே கைதூக்கிவிடுவதனல் அவர்கள் நல்லவர்கள் ஆகிவிட்டார்கள். உண்மையை உள்ளபடி உரைத்த ஸ்ரீ சிவசுப்பிரமணியம் மனதை புண்படுத்தினூர்கள். ஏன் இப்படிச் செய்யவேண்டும்? ஸ்ரீ சிவசுப்பிரமணியம் யாழ்ப்பாணத் தமிழ் மக்களின் நலம் கருதுபவர். மேலும் அவர்களாற் போற்றிப் புகழ்ந்துகொண்டாடப்படுபவர். இனியாவது தலைவர்கள் ஆவன செய்வார்களாக.

இன்றையதினம் எல்லா சமூகங்களையும்விட தமிழர்கள்தான் கீழ்நோக்கிப் போய்க்கொண்டே இருக்கின்ருர்கள். அப்பேர்ப்பட்டவர்களைக் கைதூக்கி விடுவதற்கு தலைவர்கள் இருக்கின்ருர்களே அல்லாதுஅவர்களைச்சுரண்டிஅதளபாதாளத்தில் அமிழ்த்துவதற்கு அன்று. அத்தகையோர் தலைவர்கள் அன்று; சுயநலக் கபோதிகள் எனத்தான் அழைத்தல் வேண்டும்.

கடைசியாகத் தமிழ்ச் சகோதரர்களுக்குச் சில வார்த்தைகள்.

என் சகோதரர்களே இன்றையதினம் நாம் தான் பின்னேநிற்கின்றேம். நமக்குள் பல ஆயிரக்கணக்கான பூசல்கள் இருக்கலாம். மாற்ருனுக்குக் காட்டிக்கொடாதீர்கள். நாம் வேறு, சிங்களர் வேறல்ல. இனியாகிலும், இதை உணர்ந்து சமாதானத்துடன் வாழ்வோமாக. நமக்கு எல்லாம் வல்ல இறைவனுல் புத்தி அளிக்கப்பட்டிருக்கின்றது. அதனுல் தான் நாம் மிருகங்களைவிட ஒருபடி முன்னேறி இருக்கின்றேம். எது நல்லது எது கெடுதல் என்பதைத் தீர ஆராய்ந்து பின்பற்றுமாறு உங்களைத் தாழ்மையுடன் வேண்டிக்கொள்கிறேன். கண்ணிருந்தும் குருடர்களாய் காதிருந்தும் செவிடர்களாய் வாயிருந்தும் ஊமையர்களாய் இராதீர்கள். கூட்டத்தில் கூடி இன்று கூவிப் பிதற்றும் போலித் தலைவர்களைப் பின்பற்ருதீர்கள்.

N. R. V.

கொழும்பு.

### கடிதர்க்கு விடை

கை. கனகரத்தினம்
மந்துவில்.

குறித்த பாடலில் 'முட்டிபுகும்' என்பதற்கு 'ஐயமேற்றுண்ணும்'... என்பது கருத்து. வடமொழியில் முஷ்டி என்பது ஒருகைபிடி. பிராமணர் பிட்சாபாத்திரம் ஏந்திப் பிச்சையேற்பவர்கள் எனக் கவி மேற்படி பாடலிற் கூறுகின்ருர். —ப. ர்.

### புடவைக் கட்டுப்பாட்டு அறிவித்தல்

**வெள்ளவத்தை புடவை மில்லில் இருந்து பிரசவத்துக்கு வேண்டிய புடவைப் பார்சல் அனுப்பல்**

வேலை நிறுத்தங் காரணமாக அஞ்சல் (தபால்) அதிகாரிகள் பதிவுசெய்யப்பட்ட பார்சல்களை ஏற்றுக்கொள்ள மறுப்பதால் இந்தக் கிளையத்திலிருந்து (டிப்பாட்மென்ற்) கொடுக்கப்படும் அனுமதிக்கான பிரசவத்துக்குரிய புடவைப் பார்சல்களை அனுப்புவதைத் தற்காலிகமாக நிறுத்தி இருப்பதாக வெள்ளவத்தை நெசவாலை நிர்வாகிகள் வருத்தத்துடன் தெரிவிக்கின்றனா.

2. நிலைபரம் சாதாரண நிலைமைக்கு வந்ததும் அனுப்புதல் மறுபடியும் ஆரம்பமாகும்.

ஈ. ரெட்றிக்கோ
புடவைக்கட்டுப்பாட்டதிகாரி
கொழும்பு,
1946-ம் ஆண்டு ஒக்டோபர் 22ந்வ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# நினைவுத் திரை

அன்று இரண்டு மணியிருக்கும் சாப்பாடு முடிந்ததும் ஒரு பத்திரிகையைக் கையில் எடுத்துக்கொண்டு வெளி 'விருந்தை'க்கு வந்து சேர்ந்தேன். அங்கே இருந்த சாய்மானக் கதிரையில் சாய்ந்துகொண்டு பத்திரிகையைப் படிக்கத் தொடங்கினேன்.

தரையில் ஏதோ புஸ்தகத்தை முற்றுகையிட்டு அதிலுள்ள படங்களுக்கெல்லாம் பெயர் கொடுப்பதில் மூனைந்திருந்த என் குழந்தை சோமு "அய்யா! அப்பா!! இந்தா உனக்குத் தவால் திருக்கணமலையில் மாமா போட்டது'' என்று கத்திக்கொண்டு வந்தான்.

உண்மையில் அன்று நான் திருகோணமலையிலிருக்கும்எனது நண்பர் ஒருவரது கடிதத்தை எதிர்பார்த்திருந்தேன். ஆதலால் பையன் சொன்னது மெய்யென்று நினைத்துப் பத்திரிகையைப் போட்டுவிட்டு "எங்கேடா எங்கே?'' என்று ஆவலுடன் கையை நீட்டினேன்—அவன் தன் கையிலிருந்த கடதாசியைத் தந்துவிட்டு "ஏச்சுப்போட்டேனே! அப்பாவாரை ஏச்சுப்போட்டேனே!'' என்று பாடத் தொடங்கினான்.

அவன் கொடுத்த கடதாசியைப் பிரித்தேன். அது ஒரு பழைய கடிதம். எனக்குக் கோபமும் சிரிப்பும் ஏக காலத்தில் வந்தன. இவ்வளவு சாதுர்யமாக ஏமாற்றப் பழகிவிட்டானே யென்று ஆங்சரியமாகவுமிருந்தது. "எங்கேடா தவால்......... கள்ளப்பயலே!, இந்த வயதிலேயே இவ்வளவு குள்ளப் புத்தியா...?'' என்றேன் சிறிது சிரித்துக்கொண்டே. அவனும் தனது சாமர்த்தியத்துக்கு முன் நான் தோற்றுவிட்டேன் என்று எண்ணியோ—என்னவோ தானும் சிரித்துக்கொண்டு நின்றான். "இது எங்கே இருந்தது'' என்று கேட்டேன் ஏதோ கோபங்கொண்டவன்போல. "இந்தப் புத்தகத்துக்கை இருந்ததப்பா!'' என்று தரையில் கிடந்த புஸ்தகத்தைத் தூக்கிக்கொண்டுவந்து காட்டினான். "போடா போ...... உள்ளே அம்மா கூப்பிடுகிறாள்'' என்று அவனைத் தந்திரமாக உள்ளே அனுப்பிவிட்டு, "இந்தக் கடிதத்தில்தான் என்ன இருக்கிறது பார்ப்போமே'' என்று அதிலிருந்து இரண்டுவரிகளைப் படித்தேன். என்ன ஆச்சரியம்! இது, சோமுவால்—நண்பன், தியாகி, சோமுவால்—எழுதப்பட்ட கடிதமல்லவா......? ஆமாம் ஏழு வருடங்கட்கு முன்னால் எழுதப்பட்டது. இதுதான் அவனது கடைசிக் கடிதம். அதை நான் ஏதோ புஸ்தகத்திற்குள் பத்திரமாக வைத்தேன். அந்தப் புஸ்தகம் என் குழந்தை சோமுவின் கையில் அகப்பட்டுவிட்டது. அதற்குள் இருந்த இந்தக்கடிதத்தை எடுத்துக்கொண்டு என்னை ஏமாற்ற வந்துவிட்டான். இந்தப் பயல்...! அவன் கடிதத்தை மட்டும்தானா கொண்டு வந்தான்...? ஐயோ! எங்கெங்கோ மறைந்திருந்த என் நண்பனை நினைவிற்கொண்டுவந்து பலமாக உறைந்து கிடந்த என் உள்ளத்தையுமல்லவா கிளறிவிட்டான்!

* * *

நண்பன் சோமுவும் நானும் சிறுவயதிலிருந்தே ஒன்றாக வளர்ந்தோம்; ஒன்றாகப் படித்தும் வந்தோம். அக்காலந் தொட்டுச் சிறிதும் வேறுபாடின்றிப் பழகி வந்தோம். சிறுபாயந் தொடங்கியே அவனிடம் பரோபகார சிந்தனை இருந்து வந்தது.

சில சமயங்களில் நான் பாடசாலைக்குப் போகும்பொழுது என்து பென்சிலையோ — பேனையையோ வீட்டில் விட்டுப்போய் விட்டால் அவன் தனது பென்சிலையோ—பேனையையோ எனக்குக்கொடுத்துவிட்டு எனக்காகத் தானே தண்டனையேற்று வாங்கில் ஏறியதுமுண்டு.

என்னை எந்தவிதத்திலும் கலங்கவிடமாட்டான். எனக்காக எதையும் செய்யத் தயாராக இருப்பான். எனது விருப்பத்தைப் பூர்த்திசெய்வதற்காகத் தனது வாழ்க்கையையே தியாகம் செய்த தியாகி அவன். ஆ! இனி எப்போது அவனைக் காண்பேன். தனது உண்மையை என்னிடம் சொல்லியிருந்தால் இவ்விதம் நேர்ந்திருக்க மாட்டாது.

ஒரு நண்பனுடைய இன்பத்திற்காக—எண்ணம் ஈடேற்றுவதற்காக, அவன் செய்த இந்தத் தியாகத்தை தனது தேசத்திற்காகச் செய்திருந்தால்...என்ன? ஒரு தனிமனிதனுடைய இச்சை பூர்த்தியாவதற்காகவா இவ்வித குரூரபலி?

* * *

எட்டுவருடங்கட்குமுன் ஏதோ பரீட்சையின் பொருட்டுப் பட்டணத்திற்குச் சென்றிருந்தேன். அங்கு என் சித்தப்பா வீட்டில்தான் தங்கியிருந்தேன். பரீட்சை நான்கு நாட்களாக நடந்தது.

முதல்நாள், பரீட்சை முடிந்து வீடு திரும்பும்பொழுது எனக்குமுன் ஒரு யுவதியும் போய்க்கொண்டிருந்தாள். அவளை அழகி என்றே கூற வேண்டும். அவளும் அதே பரீட்சைக்கே வந்தவள்; ஒரு முறை அவளிடம் ஏதாவது பேசிப்பார்க்க வேண்டுமென்று எண்ணினேன். ஆனால் காரணமின்றி எவ்விதம் அவளோடு பேசுவது? அதனால் ஒன்றும் பேசாமல் வந்துகொண்டிருந்தேன். இடையிடையே அவள் என்னைத்திரும்பிப்பார்த்ததாகவும் ஞாபகம். சித்தப்பா வீடுகிட்டியது அவள் அதற்குப் பக்கத்து வீட்டில் நுழைந்தாள். ஒருவேளை அது அவளுடைய வீடாகத்தானிருக்கும். இவ்விதம்நினைத்துக்கொண்டு சித்தப்பா வீட்டிற்குள் நுழைந்தேன்.

இரண்டாம்நாள், பரீட்சையிலிருந்துவந்து சாப்பாட்டை முடித்துக் கொண்டு வெளித்திண்ணையிலுள்ள கதிரையிற் படுத்தபடி அடுத்த நாளைக்குரிய பாடத்தை ஆயதம் செய்யவென்று புஸ்தகத்தைத் திறந்தேன்.

அதற்கிடையில் நினைவுத்திரை திறந்துகொண்டது. முதலில் நேற்றைய காட்சிப் படலமும் பின்பு கற்பனைப்படலமும் விரிந்தன. இந்நிலையிற் படிப்பு ஓடவில்லை. அப்பொழுது படலை திறபடும் சப்தம் கேட்டுத் திடுக்கிட்டேன்.

அவளையாரென்று தீர்மானிக்குமுன் அவள் எனக்கு முன்னால் நாணமும் நகையும் தோன்ற வந்து நின்றாள்.

"என்ன அலுவல்'' என்றேன் அலட்சியமாக.

"அப்படி ஒன்றுமில்லை, சும்மா, மாமியிடம் அலுவலாக வந்தேன்'' என்றாள் உள்ளே பார்த்துக்கொண்டு.

"மாமிஎங்கோ போய்விட்டா'' என்றேன், உள்ளே தூக்கமாய் இருப்பது தெரிந்தும்!

சிறிது நேரம்மௌனம். மீண்டும்அவளே பேசினாள்.

"வினாப்பத்திரங்கள் இலகுவாக இருந்தனவா?''

மாமியிடம்அலுவலாக வந்தவள் வலிய என்னைக்கதைக்கிழுத்தாள் "இலகுவாகத்தான் இருந்தன; அவ்வளவு கடுமையல்ல!......நாற்காலியில் உட்காரலாமே'' எதிரிலுள்ள நாற்காலியைக் காட்டினேன் அவளுக்கு. நாற்காலியை இழுத்து அதன் சட்டத்திற் பிடித்த வண்ணம் நின்றாள். நவநாகரீகப் பெண்மணிகளைச் சிறப்பிக்கும் வழிகளில் அதுவும் ஒன்றாயிருக்கலாம் என்று எண்ணினேன்.

"அப்போ எல்லாம் சரியாகத்தான் எழுதியிருப்பீர்கள், அப்படித்தானே?''

"எல்லாம் என்று சொல்வதற்கில்லை; பெரும்பாலும் சரியாகத்தான் எழுதியிருக்கிறேன்''

"நானும் அவ்வளவு திறமாக எழுதவில்லை; என்றாலும் 'பாஸ் மாக்ஸ்' எடுத்து விடுவேன்.''

......"ம்''.........என்றேன் மீண்டும் மௌனம் நிலவியது. இம்முறை நான் முந்திக் கொண்டேன்.

"உன்னுடைய பெயரென்ன; அறியலாமா?'' என்று மெல்லமாகக் கேட்டேன்.

"என் பெயரை அவ்வளவு அவசியமாக அறியவேண்டுமோ?'' என்றாள் குறும்புநகையுடன்.

"அவசரமில்லையா? யாராவது உன்னைப் போன்ற அழகிகளைக் கண்டால் அவர்களுடைய பெயர்களை அறிய வேண்டுமென்று ஆவல் உண்டாவது சகஜந்தானே! இதில் என்ன தப்பு.''

"அப்படியானால்.........நான் அவ்வளவு அழகாகவா இருக்கிறேன்?'' அவள்என்னைக் கடைவிழிகளால் நோக்கினாள்.

"பின்னே ...... அழகியில்லாமல்......?

"அப்படியென்றால் நீங்கள் என்னை ஏன் புகழவேண்டும்; இரண்டுவார்த்தை பேசுமுன் இவ்வளவுக்குப் பேச்சுத்தொடங்கி விட்டீர்கள், நன்றாகப் பழகிவிட்டால் என்ன செய்வீர்களோ?''

"நான் இவைகளொன்றையும் உன்னிடம் கேட்கவில்லை! பெண்கள் அதிகப் பிரசங்கிகள் என்பது எனக்குத் தெரியும்; உன்னுடைய பெயரைச் சொல்லுகிறாயா இல்லையா?''

"சொல்லாவிட்டால் என்ன செய்வீர்களாம்? ஆண்கள் மிரட்டற் காரர்கள் என்பதும், அவர்களை நம்பக்கூடாதென்பதும் எனக்குந் தெரியுந்தானே!'' என்றுசொல்லிவிட்டுப் பலமாகச் சிரித்தாள் அவள்.

"திரும்பவும் பிரசங்கம் செய்ய வந்துவிட்டாயா? உன் பெயரைச் சொல்வாயா மாட்டாயா?'!

"என்பெயர் கமலா''

"கமலாவா? நல்லபெயராக இருக்கிறதே!'' அவள் முகம் வெட்கத்தால் சிவந்தது. கைக்குட்டையால் தனது முகத்தை மறைத்தாள்.

"அடடே! இதழ்கள் வாடிவிடப்போகின்றனவே!. கைக்குட்டையை எடுத்துவிடு'' என்றேன் சிரிப்புடன். அவள் கைக்குட்டையை எடுத்துவிட்டு "கைக்குட்டை படுவதால் இந்த இதழ்கள் வாடிவிடமாட்டா! சந்திரகிரணத்தின் காந்திபட்டால் ஒருவேளை வாடக்கூடும்'' என்றுசொல்லி அவளும் பலமாகச் சிரித்தாள்.

"அப்படியென்றால் என்முகம் சந்திரனா?''

"அதற்கும் சந்தேகமா?''

"அதுசரி; சந்திரகிரணம் பட்டால், தாமரை வாடுவது சகஜம் தான். ஆனால் தாமரையே சந்திரனைத் தேடிவந்திருக்கிறதே!'' என்றுகூறிக்கொண்டே அவளைப் பிடிக்க எழுந்தேன். நகையொலியும் வளையொலியும் சேர்ந்தொலிக்க அவள் எழுந்து ஓடிவிட்டாள்.

(தொடரும்)

---



# ஷண்முகம் குறுக்குஎண் போட்டி No. C.

| | | |
|---|---|---|
| முதல் பரிசு | ரூ. | 3500 |
| 2-வது ,, | ரூ. | 1500 |
| 3-வது ,, | ரூ. | 800 |
| விசேஷ ,, | ரூ. | 200 |

பரிசு ரூ. 6000

முடிவு தேதி 15-11-46

பிரவேசக்கட்டணம்: கூப்பன் 1-க்கு ரூ. 1-00; 3 கூப்பன்கள் சேர்ந்த 'செட்' 1-க்கு ரூ. 2-50; அடுத்த 'செட்' 1-க்கு ரூ. 2-00. மற்ற ஒவ்வொரு கூப்பனுக்கும் 50 சதம்.



குறிப்பு

இடமிருந்து வலம்:

1. இருபது
3. முப்பது
5. முப்பத்திரண்டு
6. இருபத்திஏழு
9. இருபத்திஐந்து
10. பதினொன்று
11. நாற்பது
14. இருபத்திஒன்பது
16. பதினெட்டு
17. நாற்பத்திஎட்டு

மேலிருந்து கீழ்:

1. முப்பத்திஆறு
2. பத்தொன்பது
4. இருபத்திநாலு
7. இருபத்திமூன்று
8. முப்பத்திரண்டு
12. இருபத்திநாலு
13. பதினாறு
14. பன்னிரண்டு
15. இருபத்திரண்டு

குறிப்பு: 1. கூப்பன் அடித்தல் திருத்தலின்றி, மையினாற் பூர்த்திசெய்யவும். ஒரு கட்டத்தில் ஒரு எண் மட்டுமே உண்டு. எந்தக் கட்டமாவது பூர்த்தி செய்யாமலிருந்தால், கூப்பன் நிராகரிக்கப்படும். எல்லாவிடைகளும், 1 முதல் 18 வரை தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றன. ஒரு குறிப்புக்குரிய விடைக்கு உபயோகித்த எண்ணை மறுமுறை உபயோகிக்கக்கூடாது.

2. சரியான விடை 'ஸீலி'டப்பட்டு கொழும்பு சென்ட்ரல் வங்கி லிமிடெட்டில் (Central Bank Ltd.) 'டிபாசிட்' செய்யப்பட்டிருக்கிறது.

3. ஆசிரியரின் விடைக்கு எண்ணுக்கு எண் சரியான விடைக்கு முதல் பரிசு. ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகளுக்கு பரிசுகள் பகிர்ந்தளிக்கப்படும். ஒருவரும் சரியான விடை அனுப்பாதிருந்தால், கூடுமானவரை சரியாய் இருப்பவைக்கு பரிசு கொடுக்கப்படும்.

4. முதன்முதல் போட்டிக் காரியாலயத்துக்கு வந்து சேரும் சரியான விடைக்கு போனஸ் பரிசாக 'பார்க்கர் வாக்மாடிக்' பவுண்டன் பேனா அளிக்கப்படும்.

5. அதிகப்படியான கூப்பன்கள் ஒரே 'கவரி'ல் அனுப்புவோருக்கு 'ரோல்டுகோல்டு ரிஸ்ட்வாச்' விசேஷ பரிசாக அளிக்கப்படும்.

6. கட்டணங்கள், போஸ்ட்டல் ஆர்டர், மணியார்டரில் அனுப்பவும்.

7. கூப்பன்கள் வேண்டுவோர் தபால்மூலமோ, நேரிலோ பெற்றுக்கொள்ளலாம். போட்டி சம்பந்தமான கடிதப் போக்குவரத்துகள் கவனிக்கப்படமாட்டாது.

8. வங்கி அத்தாட்சியுடன் சரியான விடை, பரிசு பெற்றவர்களின் பெயர் முதலிய விபரங்கள் போட்டியில் கலந்துகொண்ட ஒவ்வொருவருக்கும் தபால்மூலம் அனுப்பிவைக்கப்படும்.

9. எல்லாவற்றிலும் ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

விலாசம்:

.................................................

.................................................

.................................................

SHANMUGAM PUBLISHING Co.,
165, Forbes Road : : COLOMBO

[2946]


## ORDER NISI

IN THE DISTRICT COURT OF JAFFNA

*Testamentary Jurisdiction* } *No. 609*

*In the matter of the Estate of the late Sabapathy Mylvaganam of Uduvil.*

Deceased

NAGAMMAH widow of S. Mylvaganam of Uduvil

Petitioner

*Vs.*

1. PARAMESWARY daughter of S. Mylvaganam
2. MYLVAGANAM MAHESAN
3. MYLVAGANAM MAHENDRAN
4. Ras Saheb MURUGESAR SINNATHAMBIA PILLAI all of Uduvil

Respondents

This matter coming on for disposal before R. R. Selvadurai Esquire, District Judge, Jaffna on the 19th day of September 1946 in the presence of Mr. S. Kanagasabapathy, Proctor for Petitioner and the affidavit and Petition of the Petitioner having been read:

It is ordered that the above-named 4th Respondent be appointed Guardian-ad-litem over the minors 1 to 3 Respondents for the purpose of protecting their interest and of representing them in these Testamentary proceedings and that Letters of Administration in respect of the estate of the said deceased be issued to the petitioner as his lawful widow, unless the said Respondents or any other person shall appear before this Court on the 14th day of November 1946 and show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

The 11th day of October 1946

Sgd. R. R Selvadurai
District Judge

[2972—11]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NATIONALIST TAMIL WEEKLY
# THE EELAKESARI
Largest Circulation in Ceylon, India & Malay States
Vol. 17 | Chunnakam, Sunday, Nov. 3, 1946 | No. 15

## நாட்டரிசிபற்றிய விபரம்

உணவுக் கொம்மிஷனரின் கந்தோர்
(கட்டுப்பாடும் விநியோகமும்)
கொழும்பு, 26-10-46

'ஈழகேசரி'ப் பத்திராதிபர் அவர்களுக்கு:

ஐயா!

இறக்குமதிசெய்யப்பட்ட வெள்ளை அரிசியையும் அமெரிக்கன் மாவையும் கட்லையையும் இலங்கைவாசிகள் உண்ணவேண்டியிருக்க, நாட்டரிசி மாலைதிவுகளுக்கும் மற்றும் பிறதேசங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டதென்பதை நிரூபிக்க முயன்ற, சென்ற 10-ந் திகதி வெளிவந்துள்ள காயபா என்னும் பத்திரிகையின் ஓர் கட்டுரை இப்போது என் கவனத்திற் கெட்டியது.

2. அரசாங்கசபையார் கணக்குப் பரிசோதனைக் கமிட்டிக் கூட்டமொன்றில் உண்மையாக என்னால் கூறப்பட்ட வார்த்தைகளென்று அக்கூட்ட வர்த்தமானத்தின் பகுதியொன்று வெளியிடப்பட்டிருந்தது.

3. இதன் உண்மைகள்வருமாறு:—

(அ) நாட்டரிசி

(i) அதில் கூறியவாறு உள்நாட்டரிசி வெளிநாடுகளுக்கு அனுப்பப்படவில்லை. அரசாங்கசபையார் கணக்குப்பரிசோதனைக் கமிட்டியின் வர்த்தமானத்து உண்மைப் பிரதியின் ஓர் பகுதி பின்வருமாறு:—

திரு. டகநாயகா மாலைதிவுகளைத் தவிர்த்த மற்றைய நாடுகளுக்கும் செல்லும் உள்நாட்டரிசியும் அனுப்ப வேண்டியிருக்கிறதா? திரு. பௌலியர் மாலைதிவுகளுக்குத் தன்னும் அனுப்பவேண்டியதில்லை.

(ii) ராணுவத்திலுள்ளவர்கள், அவர்கள், இலங்கையராயிருந்தும் உள்நாட்டு உணவுப் பொருள்வாங்கும் திட்டத்தில் பெற்ற நாட்டரிசியில் போஷிக்கப்படவில்லை. ராணுவத்திலுள்ளவர்கள், இலங்கையருட்பட, தங்களுக்கு வேண்டிய அரிசியை புறம்பாக வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வித்தார்கள்.

(iii) உள்நாட்டு உணவுப்பொருள் வாங்கும் திட்டத்தின்கீழ் கிடைக்கும் அரிசி அவ்வளவு குறைவாயிருப்பதால் நெல்லு விளைவிக்காத இடங்களிலுள்ளவர்களுக்கு உணவு விகிதப்படி ஒரு வாரத்தில் ஒரு நாளைக்குமட்டும் போதுமானதென்பதை அறிவுறுத்தவேண்டியிருக்கின்றது. ஒரு கிழமையின் எஞ்சிய ஆறுநாட்களின் கூப்பன் அரிசி அளவு இறக்குமதி செய்யப்பட்ட அரிசியிலிருந்தே கொடுக்கப்படவேண்டியிருக்கின்றது. வியர்வை சிந்தி விளைவிக்கப்பட்ட நாட்டரிசி எங்கள் நாட்டவர்களுக்கு பயன்படுவதில்லை என்ற குற்றச்சாட்டை மேற்கூறியுள்ள உண்மைகள் முற்றாக நிவிர்த்திசெய்யுமென்றுநம்புகின்றேன்.

(ஆ) இறக்குமதி செய்யப்பட்ட அரிசி:

இறக்குமதி செய்யப்பட்ட அரிசி இவ்விவாதத்திற் குட்படாவிட்டாலும் அரிசியையிட்ட முழுச்செய்திகளையும் தெரிவிப்பதற்கு இறக்குமதி அரிசியையிட்டுச் சில விபரங்கள் கொடுக்கவேண்டியிருக்கின்றது:—

அகில உலக உணவுச் சங்கத்தாரால் இலங்கைக்கென்று பங்கிடப்பட்ட அரிசியில் மாலைதீவுகளுக்குத் தேவைப்பட்ட அரிசியும் சேர்க்கப்பட்டுள்ளது. இத்தகைய தேவைகளுக்கு இறக்குமதி செய்யப்பட்ட அரிசி மறுமுறை கப்பலால் அனுப்புவதற்குத் தயாராகத் துறைமுகத்திலிருக்கவேண்டுமென்பது தான் இதன் நோக்கம். மாலைதீவுகளுக்குக் கப்பல் போக்குவரத்து மிகவும் அனுயாசமாயிருந்ததால் துறைமுகத்திலிருந்த அரிசி பழுதடைந்துபோகுமென்ற பயம் ஏற்பட்டது. இவ்வரிசியை மாற்றுவதற்காக இலங்கை இருப்பிலுள்ள அரிசியுடன் சேர்த்துப் பின் கப்பல் வசதிகள் ஏற்பட்டவுடன் திரும்பவும் அவ்வரிசி அனுப்பப்பட்டது. இவ்வித ஏற்பாடுகளில் நிகழ்ந்த மாற்றங்களில் இலங்கை நன்மையடைந்தது. சில சமயங்களிற் கப்பல்வசதிகள் ஏற்பட்டபொழுது அரிசி இல்லாமலிருந்தது. அப்பொழுதெல்லாம் அரிசிக்குப்பதிலாக முழுக்கோதுமை அனுப்பப்பட்டதனால் அவ்வளவு அரிசியாலும் இலங்கை நன்மையடைந்தது. இறக்குமதிசெய்யப்பட்ட அரிசியே அந்தரங்க காரியங்களுக்கு அனுப்பப்பட்டது. இவ்வரிசி இலங்கையின் தேசாதிபதியின் கட்டளைப்படி ஓர் தீவிலிருந்த இலங்கையரின் பாவிப்புக்காக அனுமதிக்கப்பட்டது.

இறக்குமதி செய்யப்பட்ட அரிசி இவ்விதமாக வெளித்தேசங்களுக்கு அனுப்புவதற்கான ஒழுங்குகள் உணவுக்கட்டுப்பாடு தொடங்கிய நாட்களில் செய்யப்பட்டதென்பதையும், அந்நாட்களில் உணவுக்கட்டுப்பாடு தொழில் மந்திரியின் கடமைகளில் ஒன்றாக இருந்ததென்பதையும் அக்கட்டுரையில் வெளிவந்துள்ள அபவாதசம்பந்தமாகத் தெரிவிக்க வேண்டியிருக்கிறது.

4. கூடிய சீக்கிரத்தில் இச்செய்தியை உங்கள் பத்திரிகையில் பிரசுரிப்பீர்களானல் நான் மிகவும் நன்றியுடையவனாக இருப்பேன்.

உங்கள் தாழ்மையுள்ள ஊழியன்
R. V. POULIER,
உணவுக்கொமிஷனர்
(கட்டுப்பாடும் விநியோகமும்)

## செல்வச் சந்நிதி

ஐப்பசிமீ 25-ந்உ (10-11-46) ஞாயிற்றுக்கிழமைபிற்பகல்வள்ளியம்மை திருமணப்படனமும் உற்சவமும் ஷை கோவிலில் நிகழும் எனக் கோவில் நிர்வாகஸ்தர் அறிவிக்கின்றார்.

## 277-வது இலக்கப் புடவைக் கட்டுப்பாட்டு அறிவித்தல்

### வியாபாரிகள் அறியவேண்டியது
### எடுக்கப்படும் கூப்பன்கள்

சில வியாபாரிகள் ஒரு துணியை விற்கும்போது உண்மையாகவே எடுத்துக்கொண்ட கூப்பன் தொகையைப் பட்டியலில் குறியாமல் அத்துணிக்கு ஏற்படும் $\frac{1}{8}$ போன்ற மிகச் சிறிய பின்னத் தொகையைத் தானும் குறிக்கின்றனர். இப்பழக்கம் பிழையானது. ஒரு துணிக்கு வியாபாரி எடுத்துக்கொண்ட கூப்பன் புள்ளி எவ்வளவோ அத்தொகை பட்டியலில் குறிக்கப்பட வேண்டும்.

ஈ. ரொட்றிக்கோ
புடவைக்கட்டுப்பாட்டதிகாரி
1946-ம்ஆ ஒக்டோபர்மீ 22-ந்உ
[2944]

## Commission Sale
## விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டு தத்துவ வழக்கு
இல. 272-P. T.

தொண்டமானறு காலஞ்சென்ற சடைஐயர் சின்னத்துரைஐயரின் உரிமைத்தத்துவம்.

தொண்டமானறு,
ச. சின்னத்துரைஐயர்
கைம்பெண் தங்கம்மா
தத்துவகாரி

மேற்குறித்த கோட்டின் உத்தரவுப்படியும் தத்துவகாரி தங்கம்மாவின் கேள்விப்படியும் இதன் கீழ்க்காணும் ஆதனங்கள் 1946-ம் ஆண்டு கார்த்திகை மீ 11ந்உ திங்கட்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கமாக குறித்த ஆதனங்களிடமாக இருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### ஆதனங்கள்

1. தனக்காரக்குறிச்சி யிறை ஈச்சங்குளி நெற்பரப்பு 14 ஷை மேட்டைக்குளி நெற்பரப்பு $22\frac{5}{8}$ ஷை நெற்பரப்பு 5 இப்பிரிவுகளுக்காக ஆட்சியிலிருக்கும் நிலப்பரப்பு $41\frac{7}{8}$ எல்லை: கிழக்கு கதிர்காமத்தம்பி கைம்பெண் தங்கமுத்துவுக்குடைய வாதனம். வடக்கு நிற்சிங்கர் கைம்பெண் பாறுபதியின் உரிமைக்காரருக்குடைய வாதனம், மேற்கு எனக்கும் பிள்ளைகளுக்குமுடைய வாதனம் தெற்கு இரத்தினம் பெண் சின்னப்பிள்ளைக்கும் மதுபேருக்குமுடைய வாதனம், இதடங்கலிற்சொரியலாய் நெற்பரப்பு ஐந்தேயரைக்காலும் பதிவு $\frac{214}{215}$.

2. ஷையிறை ஈச்சங்குளி நெற்பரப்பு $14\frac{1}{4}$ ஷைமோட்டைக்குளி நெற்பரப்பு $7\frac{3}{4}$ ஷை ஈச்சந்தரவைக்குக் கிழக்கு வடக்கு ஈச்சந்தரவை நெற்பரப்பு $2\frac{1}{4}$ இவைகளில் 1ம் பிரிவாகிய நெற்பரப்பு $14\frac{1}{4}$ எல்லை: கிழக்கு பின் சொல்லப்படும் 3ம் ஆதனம் வடக்கு இராமலிங்கம் பெண் பொன்னிக்கும் மறுபேருக்குமுடைய வாதனம். மேற்கு கதிர்காமத்தம்பி கைம்பெண் தங்கமுத்துவுக்கும் மறுபேருக்குமுடைய வாதனம். தெற்கு பொன்னர் பெண் இலட்சுமிக்கும் மறுபேருக்குமுடைய வாதனம். இதடங்கலிற் சொரியலாய் இருபதில் ஏழு பங்கும் பதிவு $\frac{214}{216}$.

3. ஷையிறை மேற்சொல்லிய 2-ம் காணிப்பிரிவுகள் மூன்றிலும் 2-ம், 3-ம் பிரிவுகளாகிய நெற்பரப்பு 10. எல்லை: கிழக்கு செல்லப்பா செல்லையாவுக்கும் மறுபேருக்குமுடைய வாதனம். வடக்கு இராமலிங்கம் பெண் பொன்னுச்சிக்கும் மறுபேருக்குமுடைய வாதனம். மேற்கு மேற்சொல்லிய 2ம் ஆதனம். தெற்கு பொன்னர் பெண் இலட்சுமிக்கும் மறுபேருக்குமுடைய வாதனம். இதடங்கலிற் சொரியலாய் அரைவாசியும் பதிவு $\frac{214}{217}$.

4. ஷையிறை குரும்பையிட்டி நிலப்பரப்பு $3\frac{7}{8}$. எல்லை: கிழக்கு ஒழுங்கை, வடக்கு எனது பிள்ளைகளுக்குடைய வாதனமும் மறுவாதனமும். மேற்கு சின்னத்தம்பி பெண் சின்னுச்சிக்குடைய வாதனமும் மறுவாதனமும். தெற்கு ரோட்டு இவ்வெல்லைக்குட்பட்ட நிலம், பனைகள், வடலிகளடங்கலிற் சொரியலாய் அரைவாசியும் பதிவு $\frac{45}{357}$.

5. ஷையிறை கட்டை முதலிவாய்க்கால் நிலப்பரப்பு $4\frac{5}{8}$ ஷை நிலப்பரப்பு 3. ஆக நிலப்பரப்பு $7\frac{5}{8}$. எல்லை: கிழக்கு இறைவாய்க்கால் வடக்கு ரோட்டு மேற்கு வயிரமுத்து கைம்பெண் தெய்வானைக்கும் மறுபேருக்குமுடைய வாதனம். தெற்கு உலககுருநாதக்குருக்கள் முத்துச்சாமிக்குருக்களுக்கும் மறுபேருக்குமுடைய வாதனம். இதடங்கலும் பதிவு $\frac{214}{218}$.

6. ஷையிறை கொக்குத்திடல் நெற்பரப்பு 29. ஷை நெற்பரப்பு $43\frac{1}{4}$ ஆக நெற்பரப்பு $72\frac{1}{4}$. எல்லை: கிழக்கு நெடிவகாடடுப் பிள்ளையார்கோயிலாதனம் வடக்கு வயிரமுத்து கைம்பெண் தெய்வானைக்குடைய வாதனம், மேற்கு கந்தையா சின்னையாவுக்கும் மறுபேருக்குமுடைய வாதனம், தெற்கு குளம் இதடங்கலிற் சொரியலாய் எட்டிலொரு பங்கும் பதிவு $\frac{214}{219}$.

7. ஷையிறை கொழுக்கட்டைய வயல் நெற்பரப்பு 39 இதிலாட்சிப்படி மேற்குப்புறமாக நெற்பரப்பு 3 எல்லை: கிழக்கு ஆறுமுகம் வீரகத்திக்கும் மறுபேருக்குமுடைய வாதனம். வடக்கு வயிரமுத்து கைம்பெண் தெய்வானைக்குடைய வாதனமும் ஒழுங்கையும். மேற்கு வல்லிபுரம் கந்தருக்கும் மருபேருக்குமுடைய வாதனம். தெற்குகுளமும்வேலுப்பிள்ளை கைம்பெண் சின்னத்தங்கத்துக்கும் மறுபேருக்குமுடைய வாதனமும் இதடங்கலிற் சொரியலாய் அரைவாசியும் பதிவு $\frac{214}{220}$.

கா. முத்துக்குமாரு ஐயர்.
பருத்தித்துறை,
14-10-46 [2942]

## தமிழ்கூறும் சீர்திருத்தம்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

களை எடுத்துக்காட்டத் தொடங்க. நமக்கு ஆத்திரமும், எதிர்ப்பு உணர்ச்சியும் தோன்றுகிறது. பின் அவரை நாம் குறைகூற முடிவில் இருவரும் பழிகூறும் நிலையினைச் சேருகிறோம். இதனால் சீர்திருத்தம் சீர்கேடாக மாறி நம் குறிக்கோளை மறந்து மக்களைக் குழப்ப நிலையிற் சேர்த்து விடுகிறோம். இங்ஙனம் நாட்டிலுள்ள நல்லவர் சிலரும் இப்போராட்டங்களில் ஈடுபடும்போதே உலகிற் குழப்பங்கள்மலிகின்றன.

நம்மினும் குறைந்த அறிவும் பண்பாடுமுடையோரை மட்டும் உள்ளத்தே வைத்துத் திருத்தங்களை வகுக்கும்போது தம்மிலும் பெரியோர் இதுவரை, இன்றும் உலகில் எப்படிச் செல்கின்றனர் என எண்ணுமை அல்லது பொருட்படுத்தாத அகந்தையாலேயே இக்குழப்பங்களெல்லாம் 'வலியார்முன் தன்னை நினைக்க' எனக்கூறியது இங்கும் பொருந்தும்.

சிலபொழுது உலகில் பெரியோர் கூறியவைகளையே பின்பற்றிச் செல்கையிலும் குழப்பங்கள் மலிவதுண்டு. அது அவர்கள்கூறிய முறை, காலம், இடம், சூழ்நிலை இவற்றை மறந்து கொள்கையைமட்டும் கடைப்பிடிப்பதனாலேயாம். நல்ல கொள்கைகளும் மதிப்பிழந்துபோதல் இவர்களால் தான். சீரிய கொள்கையையும் மக்கட் பண்பு அறிந்து உரைத்தாலே ஏற்றுக்கொள்வர். மருந்து நல்லதாயினும் அதனையேற்றுப் பயன்பெறும் நிலையில் உடல் இருக்கவேண்டாமா? இதை நினைத்தே

''செயற்கை யறிந்தக்
கடைத்தும் உலகத்
தியற்கை யறிந்து செயல்''

எனத் தமிழ் முழங்குகின்றது.

(தொடரும்)

## தேகவியோகம்

ஸ்ரீ. கா. கார்த்திகேசு

ஸ்ரீ. வி. முத்துக்குமாரு எம்.ஏ. அவர்களின் சிறியதகப்பனும் காலஞ்சென்ற பழைவீமன்காமம் குருநாதஉடையார் அவர்களின் பெருமகனுமாகிய ஸ்ரீ. கார்த்திகேசு அவர்கள் தமது 84-வது வயதில் 21-10-46 திங்கட்கிழமை காலமானர்.




இப்பத்திரிகை, யாழ்ப்பாணம்-மயிலிட்டிதெற்கு 'திருமகள் நிலயம்' நா. பொன்னையா அவர்களால், சுன்னுகம், திருமகள் அழுத்தகத்தில் 1946 நவம்பர் 3உ ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org